# شهر شعبان

# ஷஃபான் மாதம்


إعداد

**سليمان بن جاسر بن عبد الكريم الجاسر**

(مدير إدارة التوعية الإسلامية بالإدارة العامة للتربية والتعليم بمنطقة الرياض)

தொகுப்பு

**அஷ்ஷெய்க். சுலைமான் பின் ஜாஸிர் பின் அப்துல் காரீம் அல்-ஜாஸிர்**

முகாமையாளார், கல்விக்கான பொது நிர்வாகத்தின் இஸ்லாமிய விழிப்புணர்வு நிர்வாகம் - ரியாத்

**ترجمه**

**محمد رَزِين محمد أكْبر**

(خريج كلية الحديث الشريف والدراسات الإسلامية والدبلوم العالي في التوجيه والإرشاد في الجامعة الإسلامية بالمدينة المنورة)

தமிழில்

**ரஸீன் அக்பர் மதனி**

அழைப்பாளர், தபூக் அழைப்பு நிலையம் - சவூதி அரபியா

بسم الله الرحمن الرحيم

## நுழைவதற்கு முன்..........

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். மேலும், அவனின் இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அன்னாரின் குடும்பத்தினர், அன்னாரை பின்பற்றி நடந்த – நடக்க இருக்கின்ற அனைவரின் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உண்டாவதாக.

"**ஷஃபான் மாதம்**" என்ற இந்த நூலினை அரபியின் மூலவடிவம் 'அஷ்ஷெய்க் சுலைமான் பின் ஜாஸிர் பின அப்துல் கரீம் அல்-ஜாஸிர்' என்பவர்களால் தொகுக்கப்பட்டது. இது சிறிய நூலாக இருந்தாலும் அறியபல புதிய தகவல்களை உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக : ஷஃபான் மாதம் என்றால் என்ன? அதன் சிறப்புக்கள் எவை? அதன் நடுப்பகுதி தொடர்பான ஹதீஸ்கள் எவை? அவைகள் தொடர்பாக அறிஞர்களின் நிலைப்பாடும், மார்க்க தீர்ப்புக்களும் எவை? இந்த ஷஃபானின் நடுப்பகுதி இரவில் பித்அத்தான செயற்பாடுகளை முதன்முதலில் உறுவாக்கியவர்கள் யார்? மற்றும் உலகின் பல்வேறு நாடுகளிலும் இதனை எப்பெயர் கொண்டு அழைக்கின்றார்கள், என்பதுடன் அதனை எந்த அமைப்பில் கொண்டாடுகின்றார்கள்? இத்தினத்தை விலாவாக கொண்டாடுவதற்கு அவர்கள் முன்வைக்கும் ஆதாரங்கள் எவை, அவைகளுக்கான பதில்கள் எவை? என்பவைகள் மாத்திரமில்லாமல் இம்மாதத்தை ரமழானுக்காக எந்த அமைப்பில் சிறந்த முறையில் பயன்படுத்தலாம் என்ற பல விடயங்களை அல்குர்ஆன், சுன்னா அடிப்படையில் தனக்கே உரிய தோரனையில் தொகுத்துள்ளார்.

எனவே, இவரின் இந்தத் தொகுப்பை வாசிக்கக்கிடைத்ததினால் என்னாலும் பல புதியவிடயங்களை தெரிந்துகொள்ள முடியுமாக இருந்தது. ஆகவே, நான் பெற்ற இந்த பிரயோசனங்களை தமிழ்மொழி பேசும் எம் சமூகமும் பயன்பெறவேண்டும் என்ற நோக்கத்தில்; என் சக்திக்கு உட்பட்ட விதத்தில் அல்லாஹ்வின் உதவியால், தமிழுக்கு 'மொழியாக்கம்' செய்துள்ளேன். நானும் ஒரு சாதாரண மனிதன் என்பதால் ; **மொழியாக்கத்தில் தவறுகள் இறுப்பின் அன்போடு சுட்டிக்காட்ட வேண்டுகிறேன்.**

நபியவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் எம் வாழ்வை அமைத்துக்கொள்ள வல்லவன் அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள்பாளிப்பானாக!

உங்கள் சகோதரன்,

றஸீன் அக்பர் (மதனி)

**22/04/2018**

# முன்னுரை

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே. நாங்கள் அவனையே புகழ்கின்றோம், அவனிடமே உதவி தேடுகின்றோம், அவனிடமே பாவமன்னிப்பும் கோறுகின்றோம். மேலும், எங்களினதும் - எங்கள் செயல்களின் தீங்குகளில் இருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகின்றோம். மேலும், அல்லாஹுத்தஆலா எவனுக்கு நேர்வழி காட்டுகின்றானோ; அவனை யாராலும் வழிகெடுக்கவும் முடியாது. இன்னும், எவனை அவன் வழிதவறச் செய்கின்றானோ; அவர்களுக்கு யாராலும் வழிகாட்டவும் முடியாது.

வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாரும் இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு நிகராக யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். மேலும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்; அல்லாஹ்வின் அடியாரும், தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

‘‘விசுவாசங் கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை – அவனைப் பயப்பட வேண்டிய முறைப்படி பயப்படுங்கள்; மேலும், நிச்சயமாக முற்றிலும் அவனுக்குக் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிடவேண்டாம்.’’ (அத்தியாயம் : ஆலஇம்ரான், வசனம் : 102)

‘‘மனிதர்களே! நீங்கள் உங்கள் இரட்சகனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் எத்தகையவனென்றால், உங்களை (யாவரையும்) ஒரே ஆத்மாவிலிந்து படைத்தான்; அதிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான்; இன்னும் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்; இன்னும், அல்லாஹ்வை – அவனைக்கொண்டு (தனக்குரிய உரிமைகளை) நீங்கள் (ஒருவருக்கொருவர்) கேட்டுக்கொள்கிறீர்களே அத்தகையவனையும், மேலும் இரத்தக் கலப்பு சொந்தங்களை (த்துண்டித்து விடுவதை)யும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்.’’ (அத்தியாயம் : அந்நிஸா , வசனம் : 01)

‘‘(ஆகவே) விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்; நேர்மையான கூற்றையே கூறுங்கள். (அவ்வாறு நீங்கள் செய்தால்) அவன் உங்களுடைய செயல்களை உங்களுக்குச் சீர்படுத்தி வைப்பான்; உங்களுடைய குற்றங்களையும் மன்னிப்பான். மேலும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகின்றாரோ அப்போது அவர், திட்டமாக மகத்தான வெற்றியாக வெற்றியடைந்து விட்டார்.’’ (அத்தியாயம் : அல்அஹ்ஸாப் , வசனம் : 70,71)

மேலும், வார்த்தைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வார்த்தை என்றும், வாழிகாட்டுதலில் சிறந்தது முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டுதல் என்றும், விடயங்களில் மிகவும் கெட்டது நூதணங்கள் என்றும், அனைத்து நூதணங்களும் பித்அத்களாகும், அனைத்து பித்அத்களும் வழிகேடுகளாகும். அனைத்து வழிகேடுகளும் நரகிற்கு இட்டுச்செல்லும்.

ஷ.ஃ.பான் மாதம் என்பது; முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தின் நல்லடியார்களை நரகிலிருந்து பாதுகாத்து, சுவனத்தில் நுழைவிக்கக்கூடிய மாதமாகிய ரமழான் மாதத்திற்கு தயாராக்கூடிய சிறந்த சந்தர்ப்பத்திற்குரிய மாதமாகத் திகழ்கின்றது.

இந்த சிறிய நூலில் ;

- ஷ.ஃ.பான் மாதம் என்றால் என்ன?
- அதன் சில சிறப்புக்கள்?
- இந்த மாதத்தில் பரவிக்காணப்படும் சில பித்அத்தான செயற்பாடுகளை விட்டும் எச்சரித்தல்.
- ஒரு முஸ்லிம் இந்த மாதத்தின் மூலம் ரமழான் மாதத்திற்கு தயாராக்கூடிய சில வழிகாட்டுதல்கள்.

போன்ற சில விடயங்களைப் பார்ப்போம்.

இதன் மூலம் ஏதேனும் நலவுகள் ஏற்படும் என்றால் அவைகள் அனைத்தும் அல்லாஹ் ஒருவனிடமிருந்து மாத்திரமே. இவைகளில் ஏற்படும் பொடுபோக்கு அல்லது தீங்கு அல்லது மறதி போன்றவைகள் அனைத்தும் என்னிடமிருந்தும் ஷைத்தானிடமிருந்தும் வந்ததாகும். நிச்சயமாக அல்லாஹ்வும், அவனது தூதரும் இவைகளில் இருந்து நிரபராதிகள்.

முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தார், அவர்களின் வழித்தோன்றல்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உண்டாவதாக!

இதனை எழுதியவன்,

அபூ அப்திர் ரஹ்மான் சுலைமான் பின்
ஜாஸிர் பின் அப்துல் கரீம் அல் - ஜாஸிர்
ஹிஜ்ரி 1434 முஹர்ரம் மாதம் 18ஆம் நாள்

# ஷ.ஃ.பான் மாதம் பற்றிய அறிமுகம்

ஷ.ஃ.பான் மாதம் என்பது ஹிஜ்ரி வருட அமைப்பில் வருகின்ற மாதங்களில் ரஜப் மாதத்திற்கும் ரமழான் மாதத்திற்கும் மத்தியில் வருகின்ற எட்டாவது மாதமாகும்.

## அல்குர்ஆன் மற்றும் சுன்னாவில் இந்த மாதத்தை பற்றி வருவது :

அல்குர்ஆனில் ஷ.ஃ.பான் என்ற வார்த்தை வரவில்லை, மாறாக சுன்னாவிலேயே அதைப்பற்றி பல ஹதீஸ்கள் வந்துள்ளன.

## ஷ.ஃ.பான் என்ற பெயரைக் கொண்டு அழைப்பதற்கான காரணம் என்ன?

அல்ஹாபிழ் இப்னு ஹஜர் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்: ‘‘புனிதப்படுத்தப்பட்ட ரஜப் மாதம் சென்ற பிறகு இதிலே மனிதர்கள் தண்ணீரை தேடுவற்காகவோ அல்லது தாக்குவதல்களுக்கோ பல பிரிவினர்களாக பிரிவார்கள் என்பதால் ‘‘ஷ.ஃ.பான்’’ என்ற பெயரைக்கொண்டு பெயர்சூட்டப்பட்டது.’’([1])

***

# ஷ.ஃ.பான் மாதத்தின் சிறப்புக்கள்

**1-** இந்த மாதத்திலே செயற்பாடுகள் அல்லாஹ்விடம் உயர்த்தப்படுகின்றன :

உஸாமா பின் ஸைத் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வின் தூதரவர்களே! நீங்கள் ஏன் மற்ற மாதங்களைவிட ஷ.ஃ.பான் மாதத்தில் அதிகமான நோன்பு நோற்பதை நான் காண்கின்றேன், என்று வினவினேன். அதற்கு நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் : ‘இம்மாதத்தில்தான் அகிலத்தின் இரட்சகனிடத்தில் செயல்கள் உயர்த்தப்படுகின்றன. எனவே, என்னுடைய செயல் நான் நோன்பாளியாக இருக்கின்ற நிலையில் உயர்த்தப்படுவதை விரும்புகின்றேன்’ என்று கூறினார்கள்.([2])

**2-** இதிலே நபியவர்கள் அதிகமாக நோன்பு நோற்றிருக்கின்றார்கள் :

புஹாரி மற்றும் முஸ்லிம் கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்ட ஹதீஸாக, ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

---

[1]) பத்ஹுல் பாரி : (04/213)

[2]) ஆதாரம் : அந்நஸாஈ (2357) , இமாம் அல்பானி அவர்கள் தனது தமாமுல் மின்னா என்ற நூலின் 412ஆம் பக்கத்தில் இந்த ஹதீஸை ஹஸன் என்கின்றார்கள்.

“(இனி) நோன்பை விடவே மாட்டார்கள் என்று நாங்கள் கூறுமளவுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோன்பு நோற்பார்கள். (இனி) நோன்பு நோற்கவே மாட்டார்கள் என்று நாங்கள் கூறுமளவுக்கு நோன்பை விட்டுவிடுவார்கள், ரமழானைத் தவிர வேறெந்த மாதத்திலும் முழு மாதமும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை. ஷ∴பான் மாதத்தில் தவிர (வேறெந்த மாதத்திலும்) அதிகமாக அவர்கள் நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை.”([3])

மற்றொரு அறிவிப்பில் : “நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷ∴பான் மாதத்தைவிட அதிகமாக வேறெந்த மாதத்திலும் நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை, ஷ∴பான் முழுவதுமாக நோன்பு நோற்பார்கள்.”([4])

மற்றுமொரு அறிவிப்பில் : “(நபியவர்கள்) ஷ∴பானைத் தவிர வேறெந்த மாதத்திலும் அதிக நாட்கள் நோன்பு நோற்றதை நான் கண்டதில்லை. ஷ∴பான் மாதம் முழுவதும் அவர்கள் நோன்பு நோற்றிருக்கிறார்கள். ஷ∴பானில் சில நாட்கள் மட்டும் நோன்பு நோற்றும் இருக்கிறார்கள்.”([5])

***

## ஷ∴பானின் கடைசிப்பகுதியில் நோன்பு நோற்பது சம்பந்தமான சட்டம்

புஹாரி மற்றும் முஸ்லிம் கிரந்தங்களில் அபூஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்ததாக வருவது ; “நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ரமழானுக்கு முதல் நாளும் அதற்கு முதல் நாளும் உங்களில் எவரும் நோன்பு நோற்கக் கூடாது, அந்நாட்களில் வழக்கமாக நோற்கும் நோன்பு அமைந்தால் தவிர. அவ்வாறு அமைந்தால் அந்நாளில் நோன்பு நோற்கலாம்.”([6])

இமாம் அந்நவவீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : “ரமழானுக்கு முதல் நாளும் அதற்கு முதல் நாளும் உங்களில் எவரும் நோன்பு நோற்கக் கூடாது, அந்நாட்களில் வழக்கமாக நோற்கும் நோன்பு அமைந்தால் தவிர. அவ்வாறு அமைந்தால் அந்நாளில் நோன்பு நோற்கலாம்.” என்ற நபியவர்களின் கூற்றில்; ரமழானை வரவேற்கும் முகமாக அதற்கு ஓர்-இரு நாட்களுக்கு முன்பதாக நோன்பு நோற்பது தடுக்கப்பட்ட விடயம் என்பது தெளிவாக விளங்குகின்றது. அதுவும் வழமையாக நோன்பு நோற்கும் பழக்கமுடையவரைத்தவிர.

---

[3] ) ஆதாரம் : புஹாரி (1969) , முஸ்லிம் (1156)

[4] ) ஆதாரம் : புஹாரி (1970)

[5] ) ஆதாரம் : முஸ்லிம் (1156)

[6] ) ஆதாரம் : புஹாரி (1914) , முஸ்லிம் (1082)

அப்படியில்லாமல் ரமழானுடன் சேர்க்கும் முகமாக நோன்பு நோற்பது தடுக்கப்பட்டதாகும்.([7])

அம்மார் பின் யாஸிர் றழியல்லாஹு அன்ஹு அறிவித்ததாக சுனனுத் திர்மிதியில் பதிவுசெய்யப்பட்டதில் : ''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்தார்கள் ; மக்கள் சந்தேகமாக கருதும் தினத்தில் யார் நோன்பு நோற்கின்றானோ, நிச்சயமாக அவன் அபுல் காஸிமான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாறுசெய்துவிட்டான்.''([8])

**இப்னு ஹஜர் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் :** இந்த ஹதீஸின் மூலம் சந்தேகத்திற்குரிய நாட்களில் நோன்பு நோன்பது என்பது ஹராமான (தடுக்கப்பட்ட)து என்பதற்கு ஆதாரமாக எடுக்கப்படுகின்றது. ஏனெனில், ஸஹாபி இதனை தன் சொந்த கருத்தாக கூறவில்லை. எனவே, இது நபியவர்கள் வரை உயர்த்தப்பட்ட ஒரு கருத்தாக உள்ளது.([9])

சந்தேக நாள் என்பது; மேகமூட்டமோ அல்லது அவைகள் போன்ற காரணத்தினால் ஷ∴பானின் 30ஆவது தினத்தில் பிறை தென்படவில்லை என்பதாகும். மேலும், அத்தினம் பெரும்பாரும் ஷ∴பானின் 30ஆவது தினமாகவும் இருக்கலாம் அல்லது ரமழானின் முதல் தினமாகவும் இருக்கலாம் என்பதனால் தான் அத்தினத்தை சந்தேகத்திற்குரிய நாள் என்று கூறப்படுகின்றது. எனவே, வழமையாக நோன்பு நோற்று வருபவரின் நோன்பு இத்தினத்தில் அமையுமென்றால் அவரைத் தவிர மற்றவர்கள் நோன்பு நோற்பது (ஹராம்) தடுக்கப்பட்டதாகும்.

**சந்தேக தினத்தில் நோன்பு நோற்பது பற்றி இமாம் நவவீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் :**

ஒருவருடைய வழமையாக வருடம் முழுவதும் நோன்பு நோற்பது அல்லது ஒருநாள் விட்டு ஒருநாள் நோன்பு நோற்பது அல்லது திங்கள் தினத்தைப்போல் குறிப்பிட்ட தினத்தில் நோன்பு நோற்பது போன்ற காரணிகளினால்; உபரியான நோன்பு நோன்பவர் இத்தினத்தை முகம்கொடுப்பார் என்றால் அவரைப்பொருத்தவரை இத்தினத்தில் நோன்பு நோற்பது ஆகுமானதாகும், அதில் எந்தவித முரண்பாடுகளும் கிடையாது. இதற்கு ஆதாரமாக அபூஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் ஆதாரமாக உள்ளது : ''ரமழானுக்கு முதல் நாளும் அதற்கு முதல் நாளும் உங்களில் எவரும் நோன்பு நோற்கக் கூடாது, அந்நாட்களில் வழக்கமாக நோற்கும் நோன்பு அமைந்தாலே தவிர. அவ்வாறு அமைந்தால் அந்நாளில் நோன்பு நோற்கலாம்.'' ([10]) அப்படி எந்தவித காரணமும் இல்லாமல் நோன்பு நோற்பது (ஹராம்) தடுக்கப்பட்டதாகும்.([11])

---

[7] ) ஷரஹுன் நவவீ அலா முஸ்லிம் : (07/194)

[8] ) ஆதாரம் : அத்திர்மிதீ (686)

[9] ) பத்ஹுல் பாரி : (04/120)

[10] ) ஆதாரம் : புஹாரி (1914) , முஸ்லிம் (1082)

[11] ) அல்மஜ்மூ∴ ஷரஹுல் முஹந்தப் : (06/400) (சில மாற்றங்களுடன்)

**அஷ்ஷெய்க் இப்னு உஸைமீன் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் :** அறிஞர்கள் மத்தியில் இத்தடை என்பது தடுக்கப்பட்ட தடையா? அல்லது வெறுக்கப்பட்ட தடையா? என்பதில் கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. ஆகவே, அதில் சரியானது தடுக்கப்பட்ட தடையாகும். ஏனெனில், அதுதான் சந்தேகத்திற்குரிய தினமாக இருக்கின்றது. அம்மார் இப்னு யாஸிர் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : ''மக்கள் சந்தேகமாக கருதும் தினத்தில் யார் நோன்பு நோற்கின்றானோ நிச்சயமாக அவன் அபுல் காஸிமான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாறுசெய்துவிட்டான்.''([12])

ஆதலால், இதன் அடிப்படையில் வழமையாக நோன்பு நோற்று வருபவனைத்தவிர மற்றவர்கள் ரமழானுக்கு ஒரு தினத்திற்கோ அல்லது இரு தினங்களுக்கு முன்போ நோன்பு நோற்பது ஆகுமானதல்ல. இன்னும், ஷ∴பானின் 30 ஆம் தின இரவில் மேகமூட்டத்தினாலோ அல்லது மழையின் காரணமாகவோ பிறை தென்படுவது தடுக்கப்படும் என்றிருந்தால் அந்த சந்தேகத்திற்குரிய தினத்தில் நோன்பு நோற்பது கூடாது. ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ''பிறையைப் பார்த்து நோன்பு வையுங்கள், பிறையைப் பார்த்து நோன்பை விடுங்கள்.''([13])

என்றாலும் ஷ∴பானின் நடுப்பகுதிக்குப்பிறகு நோன்பு நோற்பதை தடுப்பதாக வரக்கூடிய ஹதீஸை பொருத்தவரை இமாம் திர்மிதீ அவர்கள் -ஹஸன் ஸஹீஹ்- என்று கூறினாலும் அது பலவீனமான ஹதீஸாகும். இமாம் அஹ்மத் அவர்கள் கூறினார்கள் : அது 'ஸாத்' வகையைச் சார்ந்ததாகும். ஏனெனில் அது, நபியவர்களின் கூற்றான ''ரமழானுக்கு முதல் நாளும் அதற்கு முதல் நாளும் உங்களில் எவரும் நோன்பு நோற்கக் கூடாது'' என்ற அபீஹுரை றழியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பிற்கு முரணானதாக இருக்கின்றது. அதில் விளங்குவது என்னவென்றால் ரமழானுக்கு மூன்று, நான்கு, பத்து தினங்களுக்கு முன்னர் நோன்பு நோற்பது ஆகுமானதாகும்.

(ஷ∴பானின் நடுப்பகுதிக்கு பின்னர் நோன்பு நோற்பது கூடாது) என்ற தடுக்கப்பட்டு வந்த ஹதீஸ், ஆதாரபூர்வமானது என்று வைத்துக்கொண்டாலும், அந்தத் தடை என்பது ஹராமானது அல்ல மாறாக வழமையாக நோன்பு நோன்பதை பழக்கப்படுத்திக்கொண்டவனைப் பொருத்தவரை ஷ∴பானின் நடுப்பகுதிக்கு பிறகும் நோன்பு நோற்கலாம். ஆனால், மற்றவர்கள் நோன்பதுதான் வெறுக்கத்தக்கது என்பதையே சில அறிஞர்கள் எடுத்துள்ளார்கள்.

---

[12] ) ஆதாரம் : அத்திர்மிதீ (686)

[13] ) ஆதாரம் : புஹாரி (1909) , முஸ்லிம் (1081)

**எனவே, இந்த அடிப்படையில் ஷ ஃ.பானில் நோன்பு நோற்பது சம்பந்தமாக மூன்று பிரிவுகள் உள்ளன:**

1- நடுப்பகுதிக்குப்பிறகு 28 ஆம் தினம் வரை நோன்பு நோற்பது ; யார் வழமையாக நோன்பு நோற்பதை பழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றாரோ அவரைத்தவிர மற்றவர்களுக்கு அது வெறுக்கத்தக்கது. என்றாலும் இக்கருத்து; ஹதீஸ் ஆதாரபூர்வமானது என்ற அடிப்படையில் பெறப்பட்டது. இன்னும் இமாம் அஹ்மத் அவர்களிடம் இந்த ஹதீஸ் பலவீனம் என்பதால், இவரின் நிலைப்பாடு வெறுக்கத்தக்கதல்ல என்பதாகும்.

2- ரமழானுக்கு ஓர் - இரு தினங்களுக்கு முன்னர் நோன்பு நோற்பது, வழையாக நோன்பு நோற்பதை பழக்கமாக்கிக் கொண்டவனைத் தவிர மற்றவர்களுக்கு (ஹராம்) தடுக்கப்பட்டதாகும்.

3- சந்தேகத்திற்குரிய நாளில் நோன்பு நோற்பது பொதுவாக (ஹராம்) தடையாகும். ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்; சந்தேகத்திற்குரிய நாளில் நோன்பு நோற்கவேண்டாம் என்று தடைசெய்துள்ளார்கள்.([14])

***

[14] ) ஷரஹு ரியாளுஸ் ஸாலிஹீன் : (05/282)

# ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவு

## முதலாவது : அதன் சிறப்பு ;

அல்லாஹுத்தஆலா ரஜபின் நடுப்பகுதி இரவை சிறப்பு மிக்க இரவாக வைத்திருக்கின்றான். அதிலே அவன் தனது அனைத்து படைப்புகளையும் எட்டிப்பார்த்து, அவர்களுடைய பாவங்களை மன்னிக்கின்றான். ஆனால், அல்லாஹ்வுக்கு இணைவைப்பவனையும், ஒருவனுக்கும் மற்றவனுக்கும் மத்தியில் குரோதம் இருக்கும் மனிதனையும் தவிர. என்றாலும், இணைவைப்பாளன் தனது இணைவைப்பிலிருந்து விடுபட்டு அல்லாஹ்வை ஒருமைப்படுத்துகின்ற போது, குரோதம் கொண்டிருந்த மனிதன் தன் குரோதத்தை விட்டு இருவரும் ஒன்றுபடுகின்றபோது அவர்களின் பாவங்களையும் அல்லாஹ் மன்னிக்கின்றான்.

இதனை இமாம் இப்னு மாஜா அவர்கள் தனது சுனன் என்ற நூலில் அபீமூஸா அல்அஷ்அரீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் ; ‘‘நிச்சயமாக அல்லாஹுத்தஆலா ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவில் எட்டிப்பார்த்து, அதிலே தனது படைப்பினங்களின் பாவங்களை மன்னிக்கின்றான். என்றாலும், இணைவைப்பாளனையும், ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் குரோதம் கொண்டிருப்பவனையும் தவிர.’’([15])

அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் , சுவனத்தையும் விரும்புபவன் ; தனக்கும், தனக்கு நெருங்கிய மற்றும் தூர உறவிற்கு அல்லது தனக்கும் தன் நண்பனுக்கும் அல்லது தனக்கும் வேறு எந்த மனிதனுக்கும் மத்தியில் குரோதங்கள் இருந்தால் அவைகளை போக்கி அமைதியை நிலைநாட்டட்டும். அதேபோன்று வட்டி அல்லது புறம் அல்லது கோல் அல்லது இசைகள் மற்றும் பாடல்கள் செவிமடுத்தல் போன்ற இன்னோரன்ன அனைத்து பாவங்களை விட்டும் பாவமன்னிப்பு கேட்கும் ஒரு சந்தர்ப்பமாக இருக்கின்றது.

ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவை நோன்பு அல்லது நின்று வணங்குவது போன்ற விடயங்களைக்கொண்டு சிறப்பிப்பது ஆகுமானதல்ல. ஏனெனில், நாங்கள் அறிந்தவரையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோ அவர்களின் உற்ற தோழர்களோ அந்த இரவை இப்படியான செயற்பாடுகளைக்கொண்டு சிறப்பிக்கவுமில்லை, அப்படி செய்ததாக எந்தவித நிகழ்வுகளும் உறுதியானதாக இல்லை.

இதற்கு ஆதாரமாக அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ஒரு ஆதாரமற்ற தகவலை கூறுகின்றார்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ‘‘ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவானால், அதன் இரவை நின்று வணங்குவதுடன் அதன் பகல் பொழுதில் நோன்பும் பிடியுங்கள்.

---

15 ) ஆதாரம் : இப்னு மாஜா (1390) ,இதனை இமாம் அல்பானீ அவர்கள் ‘ஸஹீஹுல் ஜாமிஃ.’ என்ற கிரந்தத்தில் (1819) ஹஸனானது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

நிச்சயமாக அல்லாஹுத்தஆலா அந்த நாளின் சூரியன் மறைவிற்குப் பின்னர் பூமிக்கு அருகாமையில் உள்ள வானத்தில்பால் வந்து யாரேனும் பாவமன்னிப்பு கேட்பவர்கள் இல்லையா? அவருடைய பாவங்களை மன்னிக்கின்றேன். (மேலும்) வாழ்வாதாரத்தை வேண்டுபவர்கள் இல்லையா? அவனுடைய வாழ்வாதாரத்தை வழங்க காத்துக்கொண்டிருக்கின்றேன். (மேலும்) நோய்வாய்ப்பட்டவன் யாருமில்லையா? அவனுக்கு ஆரோக்கியத்தை கொடுக்கவுள்ளேன். (மேலும்) இப்படி இப்படியானவர்கள் இல்லையா? என்று அதிகாலையில் சூரியன் உதயமாகும் வரை கூறிக்கொண்டே இருப்பான்.''([16]) இச்செய்தி இட்டுக்கட்டப்பட்ட செய்தியாக இருக்கின்றனது.

## இரண்டாவது : ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை கொண்டாடுதல்([17]) :

## அதன் காலம் :

ஷ.்.பான் மாத்தின் 15 ஆவது இரவை சில மனிதர்கள் அதனை ஒரு கொண்டாட இரவாக்கியுள்ளார்கள். ஏனெனில், அந்த இரவின் சிறப்பைப் பற்றி சில அறிவிப்புக்கள் வந்துள்ளன என்ற அடிப்படையினாலாகும். (என்றாலும்) அந்த ஹதீஸ்கள் தொடர்பாக அறிஞர்கள் மத்தியில் (கருத்து) மோதல்கள் இருக்கின்றன. அவைகளை ஆதாரபூர்வமானது என்று கூறியவர்களும் உள்ளனர், அவைகளை பலவீனமாக்கியவர்களும் உள்ளனர்.

இந்த இரவின் சிறப்பு –ஆதாரமானதாக இருந்தாலும்- பொதுவாகவோ, சிலவேளை குறிப்பாகவோ இந்த பித்அத்தின் பாரதூரத்தை அறியாமல் இதனை கொண்டாடக்கூடிய ஒரு சிறப்புத்தினமாக எடுத்துக்கொள்வதற்கு அவசியமில்லை. என்றாலும், அவர்கள் இந்த இரவை கொண்டாடக்கூடிய ஒரு பெருநாளாக ஆக்கிவைத்துள்ளார்கள். இதிலே அவர்கள், இஸ்லாம் அங்கீகரித்த பெருநாட்களைப்போன்று வெளிப்படுத்தப்படக்கூடிய சந்தோகங்கள், விளையாட்டுக்கள் போன்றவைகளை வெளிக்காட்டுகிறார்கள். ஆதலால் இவ்விரவு தெளிவுபடுத்தப்படவேண்டிய பித்அத்தான கொண்டாட்ட வகைகளில் ஒன்றாக இருக்கின்றது.

முதன்முதலில் ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை பித்அத்தான கொண்டாட்டத்தினமாக குறிப்பாக அறிமுகப்படுத்தியவர்கள் (நெருப்பு மூட்டி) ''பராமிகாக்கள்'' ஆவார்கள்.

அல்ஹாபிழ் அபுல் கத்தாப் இப்னு தஹிய்யா அவர்கள் கூறினார்கள் : இதனை உறுவாக்கிய பித்அத்வாதிகள் மற்றும் அதனை வெளிக்கொணர்ந்தவர்கள் தங்களை சட்டமியற்றுபவர்கள் என்று பெயர் சூட்டிக்கொண்டார்கள். மேலும் அதிலே

---

16 ) ஆதாரம் : இப்னு மாஜா.்., இமாம் அல்பானீ அவர்கள் ழஈப் இப்னு மாஜா (294) மற்றும் ஸில்ஸிலதுல் அஹாதீஸ் அழ்ழஈபா (2132) போன்ற நூல்களில் பலகீனமானது என்று கூறியுள்ளார்கள்.

17 ) அல்அ.்.யாத் அல்முஹ்தஸா வ மவ்கிபுல் இஸ்லாம் மின்ஹா , பக்கம் : 210 மற்றும் அதற்குப் பிறகும் (சில மாற்றங்களுடன்).

அந்த பித்அத்வாதிகள், மஜூஸி (நெருப்பு வணங்கி)களின் வழிமுறைகளை பின்பற்றியதுடன் அவர்களுடைய (தூய இஸ்லாமிய) மார்க்கத்தை அவர்களாகவே வீணாகவும் விளையாட்டாகவும் எடுத்துக்கொண்டார்கள். ஷஃபானின் நடுப்பகுதியில் நெருப்பு மூட்டுவது சம்பந்தமாகவோ அல்லது அதில் நின்று வணங்குவது சம்பந்தமாகவோ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொட்டோ அல்லது உண்மையான அறிவிப்பாளர்களைத்தொட்டோ எந்தவித ஆதாரபூர்வமான அறிவிப்புக்களும் வரவில்லை. அஷ்ஷரீஆ அல்முஹம்மதிய்யா (முஹம்மதின் இஸ்லாமிய சட்டத்)தில் இப்படியான பித்அத்களை உருவாக்கியது; நெருப்பு வணங்கி (மஜூஸி)களின் மார்க்கத்தை ஆதரிக்கும் நெருப்பு வணங்கிகள். இச்செயற்பாடு முதன்முதலாக நடைபெற்றது பராமிக்காக்களின் காலத்திலாகும். அவர்கள்தான் நெருப்பு வணக்கத்தின் அடிப்படைகளை இஸ்லாத்தில் உட்புகுத்தியவர்களாவர்.([18])

ஷீஆச் சாயலுடைய முஹம்மத் பின் அலீ பின் ஹலப் அபூ காலிப் என்பவன் முதன்முதலில் ஷஃபானின் நடுப்பகுதியை வித்தியாசமான இனிப்புப்பண்டங்கள் மூலமாக பண்டிகைத் தின வெளிப்பாடுகளை உருவாக்கியவனாவான். மேலும், அவன் அப்பாஸிய ஆட்சிக்கால அமைச்சர் என்பதும் குறிப்பிடத்தக்கது.([19])

## இதன் வெளிப்பாடுகள் :

ஒரு சமூகத்திலிருந்து இன்னொரு சமூகத்திற்கும், ஒரு காலத்திலிருந்து இன்னொரு காலத்திற்கும் ஏற்றாற்போல் ஷஃபான் நடுப்பகுதி கொண்டாட்ட வெளிப்பாடுகள் வித்தியாசப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில் மெழுகுவர்த்திகள், தீப்பந்தல்கள், பள்ளிவாயல்களில் விளக்குகள் பற்றவைப்பதன் மூலம் ஒரு மதத்தன்மையை வெளிப்படுத்தக்கூடியதாக இந்த கொண்டாட்டம் காணப்பட்டது. இந்த இரவில் வணக்கத்திற்காவும், அல்லாஹ்வை ஞாபகமூட்டுவதற்காகவும் என்று மக்கள் ஒன்றுகூடுகிறார்கள். அதனுடன் சேர்த்து கப்ருகளையும் தரிசிப்பார்கள். மக்காவாசிகளை பொருத்தவரை அவர்கள் உம்ராவுக்காக வெளியேறுபவர்களாக இருந்தார்கள்.([20]) சில சந்தர்ப்பங்களில் குடும்பங்களுக்குள் இதைவிட சற்று விரிவாக; இந்த தினத்தில் இனிப்புப்பண்டங்களும், அதுபோன்றவைகளும் பகிரப்படுவதுடன், உணவு சமைத்தல், அலங்காரங்களை வெளிப்படுத்தல் போன்ற செயற்பாடுகளும் நடைபெற்றன.([21])

---

[18] ) அல்பாஹிஸ் பீ இன்காரில் பிதஃ வல்ஹவாதிஸ் - லி அபீ ஷாமா – (பக்கம் : 52) , அல்அமர் பில் இத்திபாஇ வந்நஹ்யு அனில் இப்திதாஇ - இமாம் அஸ்ஸுயூதி – (பக்கம் : 177-179).

[19] ) அல்பிதாயா வன்னிஹாயா (05/12), முஃஜமுல் அவாயில் - கலாநிதி புவாத் ஸாலிஹ் அஸ்ஸெய்யித் பக்கம்:505, இந்த அமைச்சர் ஹி.407 இல் கொள்ளப்பட்டான்.

[20] ) அல்ஹுதத் :(02/392,436) (04/344) , ரிஹ்லது இப்னு பதூதா (பக்கம் : 165) , இத்ஆலுல் ஹுனபாஉல் மக்ரீஸீ (02/90,102).

[21] ) இக்திழாஉ அஸ்ஸிராதல் முஸ்தகீம் : (02/628).

சில இந்திய முஸ்லிம்கள் கப்றுகளின் மீது மெழுகுவர்த்திகள் பற்றவைப்பது, பூக்கள் போடுவது, சென்ற ஷ.்.பான் தொடக்கம் அவர்களுடைய அன்றைய தினம் வரை மரணித்தவர்களின் பெயர்களை பதிவுசெய்வது, இனிப்புப்பண்டங்கள் தயாரிப்பது, தன் கணவனை இழந்த பெண்கள் அவர்களின் கணவன்களுக்கு என்று அவர்கள் விரும்பும் உணவை சமைத்து காத்துக்கொண்டிருப்பார்கள், ஏனெனில் அத்தினத்தில் அவளுடைய கணவனின் உயிர் வரும் என்ற கொள்கையிலாகும்; இப்படிப்பட்ட செயற்பாடுகளும் நடைபெற்றன.([22])

மொரோக்கோ பகுதியில் சூபிக் கொள்கையில் மூழ்கியவர்கள்; இந்த ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை மிகவும் கரிசனை காட்டுகிறார்கள். ஏனெனில், இந்த இரவில் தான் மனிதர்களின் விதி நிர்ணயிக்கப்படுவதாகவும், அந்த நிர்ணயத்தில் ஜின்களுக்கு ஒரு பங்கு இருப்பதாகவும் நம்புகின்றார்கள். எனவே, தனது விரும்பங்களின் தேவைகளை உறுதிப்படுத்தவும், அல்லது நீக்கவும், அல்லது செயற்பாடுகளில் வெற்றியை வேண்டவும், அல்லது வேறுபயன்களை பெற்றுக்கொள்ளவும் ஜின்களின் அரசர்களிடம் வஸீலா தேடுவது அவசியமானது என உறுதியாக நம்புகிறார்கள். ஆகவே, கொண்டாட்டமாகக் கருதுகின்ற இவ்விரவை **'லைலதுல் தர்தபா'** என்ற பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றது. இந்த இரவில் அவர்களிடம் மூன்று படித்தரங்கள் உள்ளன :

**முதலாவது** : கருப்பு நிற ஆண்ஆட்டை ஜின்னிற்காக அறுத்துப்பலியிடுதல், மெல்லிசை சங்கீதங்களுடன் மேலதாளங்கள் வாசித்தல்.

**இரண்டாவது** : கூட்டாக உட்சாகம் பெற தயாராகும் பொருட்டு தாளத்தை உயர்த்தும் படித்தரம்.

**மூன்றாவது** : கூட்டு உட்சாகம் பலமுறைகளில் வந்தடையும், அது நடனதாளத்துடன் ஆரம்பித்து, படிப்படியாக உட்சாசத்துடன் முழுஉடலையும் வலைக்கக்கூடிய அசைவாகும், மென்மையாக இருந்தது அவர்களை ஆட்டவைக்கும்.([23])

எகிப்து மற்றும் ஷாம் போன்ற நாடுகளில் விழாவாகக்கொண்டாடப்படும். இத்தினத்தில் நாட்டுத்தலைவரின் தலைமையிலோ அல்லது அவர் சார்பாக ஒருவரின் கண்காணிப்பிலோ பெரிய பள்ளிவாயல்களில் பேச்சுப்போட்டி நடாத்தப்படும். இன்னும் அதிலே சிறிய – பெரிய உரைகள் மற்றும் இரைந்து வேண்டுதல், அல்குர்ஆனை பார்த்து ஓதுதல் போன்றவைகள் நடைபெறும்.([24])

வலைகுடை நாடுகளைப் பொருத்தவரை; ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் தங்களின் கூட்டு கலாச்சார பாரம்பரிய வர்ணனைகளை வெளிப்படுத்தும் விதமாக விழாகொண்டாடப்படும். எனவே, எழுத்து விளையாட்டுக்களும், பிரபல்யமான

---

[22] ) தஹ்தீருல் முஸ்லிமீன் அனில் இப்திதாஇ வல் பித.். பித்தீனி – லிஇப்னு ஹஜ்ர் அபூ தாமீ (பக்கம் : 282).

[23] ) அல்மு.்.தகதாத் வத்துகூஸ் அஸ்ஸிஹ்ரிய்யா பில் ம.்.ரிப் (பக்கம் : 123-127).

[24] ) வலைதளம் : ஜெரீததுல் பிதாஉ அஸ்ஸுரிய்யா fedaa.alwehda.gov , வலைதளம் : ஹைஅதுல் ஆம்மா லில் இஸ்தி.்.மாலாத் பி மிஸ்ர www2.sis.gov.

பாடல்களும் விழாவில் கலந்திருக்கும். ஆதலால், வலைகுடை நாடுகளின் இந்நிகழ்வுகளை ‘சுற்றுலா மற்றும் வணிகத்துறை’ இதனை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபடும்.

கத்தாரில் ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை **‘லைலதுந் நாபிலா’** என்று அழைப்பார்கள். அதிலே அல்ஹரீஸ், அல்பலாலீத், அஸ்ஸலாபியா, அல்லுகைமாத், அல்ஹபீஸ், அல்மக்பூஸ் போன்ற பிரபல்யமான உணவுவகைகள் குடும்பத்தாருக்கும், அண்டைவீட்டாருக்கும், உறவினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

மேலும், இத்தினத்திலே பாரம்பரிய பொழுதுபோக்கு விளையாட்டுக்களான கோலைன், கரப்பந்து, ரோலர், ரைன், பொம்மைகள் போன்ற விளையாட்டுக்களின்பால் சிறுவர்கள் ஒன்று சேர்வார்கள்.

அத்துடன் கப்பல் கட்டுதல், கைகால் எடுக்கப்பட்ட கம்பளிநூல் போன்ற கைத்தொழில் உருவாக்கங்கள் காட்சிப்படுத்துவதின் மூலம் நிறைவுபெரும்.

இன்னும் சிறுவர்கள் பாரம்பரிய பாடல்கள் சிலதை பாடுவார்கள் : உதாரணமாக :

*உங்களுக்கு வழங்கியதையும் அல்லாஹ் எங்களுக்கும் வழங்குவான்*

*மக்காவில் உள்ள அல்லாஹ்வின் ஆலயத்தை தரிசிக்க அருள்பாளிப்பான்*

இன்னும் அவர்கள் அத்தினத்தில் பழமையான பாரம்பரிய கலாச்சார ஆடைகளை அணிவார்கள். உதாரணமாக : சாரி, பூக்கள் கொண்ட ஆடை. மற்றும் சிறுவர்கள் ஒரு வகைத்தொப்பி, சட்டை போன்றவற்றை அணிவார்கள். இன்னும் அச்சிறுவர்கள் வீடுகளை சுற்றியவர்களாக இனிப்புப்பண்டங்களையும், அன்பளிப்புக்களையும் சேகரிப்பார்கள்.

டுபாயில் **‘ஹக்குல் லைலா’** என்று கூறப்படும். அதிலே சிறுவர்கள் புதிய ஆடைகளை அணிவார்கள், இனிப்புப்பண்டங்களை தேடியவர்களாக வீடுகளை சுற்றிவருவார்கள், மேலும் பாடல்களை திரும்பத்திரும்ப பாடுவார்கள்.

பஹ்ரைனில் **‘லைலதுன் நாஸிபா’** என்று கூறப்படும்.

குவைத்தில் **‘கர்கீஆன்’** என்று கூறப்படும்.

ஓமானில் **‘அல்கரன்கஷ்வா’** என்று கூறப்படும். இந்த நாடுகளிலும் இவைகளை அண்மித்த நாடுகளிலும் அதிக வித்தியாசமில்லாமல் ஒரே வகையான செயற்பாடுகளே வெளிப்படுகின்றன.([25])

இன்னும் வலைகுடாவிலுள்ள ஷீயாக்களைப் பொருத்தமட்டில் அவர்கள் இவ்விரவை மிகவும் கவனம் செலுத்துகிறார்கள். எனவே, அதில் அவர்கள் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துக்களையும், நன்மாராயங்களையும்

[25] ) வலைதளம் : ஜெரீததுல் பயான் அல்இமாராதிய்யா www.albayan.ar/servlet/satellite

பரிமாற்றிக்கொள்வதுடன், பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தரிசித்துக்கொள்வார்கள். இன்னும் அவர்களின் வீடுகளை சுற்றிவரும் சிறுவர்களுக்கு பரிசுகளை வழங்குவார்கள். அத்துடன் இந்த இரவில் அவர்கள் எதிர்பார்க்கும் மஹ்தியின் பிறந்த தினத்தையும் ஞாபகப்படுத்துவார்கள்.([26])

## ஷ.ஃபானின் நடுப்பகுதி இரவை கொண்டாட்டமாக எடுத்துக்கொள்வதின் சட்டம்

இத்தினத்தை கொண்டாட்டத்தினமாக எடுத்துக்கொள்வதை ஆரம்பகால மற்றும் நவீனகால அறிஞர்கள் புரக்கணித்துள்ளார்கள்.

இப்னுஸ் ஸலாஹ் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : ((ஷ.ஃபானின் நடுப்பகுதி இரவைப் பொருத்தவரை அதற்கு சிறப்புக்கள் உள்ளன. மற்றும் அத்தினத்தை வணக்கத்தைக்கொண்டு உயிர்பிப்பது விரும்பத்தக்கது. என்றாலும் தனிப்பட்ட ரீதியினாலாகும் மாறாக கூட்டுமுறையில் அல்ல. மக்கள் அந்த இரவை அதிகமான நன்மைகள் தரக்கூடிய ஒரு சீசனாக எடுத்துக்கொள்வது வெறுக்கத்தக்க பித்அத்தாகும். மேலும், அந்த இரவில் தங்களின் தேவைகளுக்கும், வழக்கங்களுக்கும் அதிகமான நெருப்புகளை மூட்டுவது போன்ற செயற்பாடுகள் இஸ்லாமிய சட்டத்திற்கு முரண்பாடான செயற்பாடாகும்.))([27])

ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்: ((ஷ.ஃபான் நடுப்பகுதியில் நோன்பு பிடிப்பதற்கு எந்தவித அடிப்படை ஆதாரமும் கிடையாது. மாறாக அத்தினத்தில் மாத்திரம் நோன்பு நோற்பது வெறுக்கத்தக்கதாகும். அதேபோன்று அத்தினத்தை உணவுகள் சமைக்கக்கூடிய ஒரு சிறப்புப் தினமாக எடுத்துக்கொள்வது, அதிலே அலங்காரங்களை வெளிப்படுத்துவது போன்ற அனைத்துமே எந்தவித அடிப்படையுமற்ற பித்அத்தான செயற்பாடுகளையுடைய நாட்களாக உள்ளன.))([28])

இமாம் நவவீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : ((அதிகமான பாரிய மின்விளக்குகளை பற்றவைப்பது, சுன்னாவில் அறியப்பட்ட இரவுகளான ஷ.ஃபானின் நடுப்பகுதி போன்ற இரவுகளில் செலவளிப்பது போன்ற செயற்பாடுகள் அதிகமான நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வெறுக்கத்தக்க பித்அத்களில் ஒன்றாக இருக்கின்றது. எனவே, இப்படியான செயற்பாடுகளால் அதிகமான விபரீதங்கள் ஏற்படுகின்றன. அவைகளில் சில ; நெருப்பு வணங்களின் ஒத்த செயற்பாடான நெருப்புகளை மூட்டுவது, முறையற்ற விதத்தில் பொருளாதாரம் வீணடிக்கப்படுவது போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் அதிகமான பள்ளிவாயல்களில் சிறுவர்களும், தேவையில்லாத மனிதர்களும் ஒன்றுகூடி விளையாடி, அதிலே அவர்களின் சப்தங்களை உயர்த்தி, அவர்களின் பள்ளிவாயல்களை

[26] ) வலைதளம் : ஹுஸ்னுஸ்ஸபார் www.saffar.org.

[27] ) ‘முஜாலஸா இல்மிய்யா பைனல் இஸ் பின் அப்துஸ் ஸலாம் இப்னுஸ் ஸலாஹ்’ (பக்கம்:41).

[28] ) அல்-இக்திழாஉ : (02/628)

கேவலப்படுத்துவதுடன் - அதன் கண்ணியத்தை பாழ்படுத்தி; அதிலே அழுக்குகள் வந்தடைகின்றன. இவைபோன்ற எத்தனையோ தீங்குகளை உண்டுபண்ணும் தனிமனிதர்களிடமிருந்து பள்ளிவாயல்களை காப்பாற்றுவது கடைமையாகின்றது.))([29])

அஷ்ஷெய்க் முஹம்மத் ரஷீத் ரிழா றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : ((ஷ.்.பானின் நடுப்பகுதியில் பள்ளிவாயல்களில் வழக்கமாக நடைபெறக்கூடிய பித்அத்தான விழாக்களை அறிஞர்கள் தடுக்கின்றார்கள். அத்துடன் அதில் நடைபெறக்கூடிய வெறுக்கத்தக்க விடயங்களான அதிகமான விளக்குகளை பற்றவைப்பதையும் கூட. ஷ.்.பானின் நடுப்பகுதியில் நின்றுவணங்குதல், தொழுதல் போன்றவைகள் தொடர்பாக வரக்கூடிய செய்திகளும் சம்பவங்களும் இட்டுக்கட்டப்பட்டவைகளாகவும், அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் இமாம் இப்னு மாஜா றஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவிக்கும் ஹதீஸும் பலவீனமானது.))([30])

அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் பாஸ் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்: ((ஷ.்.பானின் நடுப்பகுதியை விழாக்கொண்டாட்டம் பூண்டுவதும், அத்தினத்தை நோன்பைக்கொண்டு சிறப்பிப்பதும் சில மனிதர்கள் உருவாக்கிய பித்அத்களில் ஒன்றாக இருக்கின்றது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஆகுமான எந்தவித ஆதாரங்களும் கிடையாது. மேலும், அதனை விழாவாக எடுப்பது ஒரு பித்அத்தான செயற்பாடு என்று பெரும்பான்மையான அறிஞர்கள் உடன்பட்டுகின்றனர்.))([31])

அறிவியல் ஆய்வுகளுக்கும், பத்வாக்களுக்குமான நிரந்தர அமைப்பின் பத்வாவில் : ((ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை விழாக் கொண்டாட்டமாக்குவது ஒரு பித்அத்தான செயற்பாடாகும்.))([32])

அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் பின் ஜிப்ரீன் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : ((ஷ.்.பானின் நடுப்பகுதி இரவு, நபியவர்கள் பிறந்த தின இரவு, இஸ்ரா.். இரவு போன்ற இரவுகளில் சிறப்புக்கள் இருப்பதாகக் கருதி அவ்விரவுகளில் பள்ளிவாயல்களை ஒளிமயப்படுத்துவதும், அலங்கரிப்பதும் சில மடையவர்களின் வழக்காருகளாக இருக்கின்றன. இவைகள் அனைத்திற்கும் எந்தவித அடிப்படையும் கிடையாது. எனவே, இவைகள் பித்அத்தான செயற்பாடுகளாகும்.))([33])

***

---

29 ) அல்மஜ்மூஉ ஷரஹுல் முஹந்தப் (02/181).

30 ) பதாவா அஷ்ஷெய்க் முஹம்மத் ரஷீத் ரிழா (01/2314).

31 ) மஜ்மூஉ பதாவா வ மகாலாத் முதனவ்விஆ (01/186).

32 ) (03/82)

33 ) அல்பிதஉ வல்மு.்.தஸாத் வமா லா அஸ்ல லஹு (பக்கம்: 211-212).

# ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை விழாக்கொண்டாட்டமாக்குவது பித்அத்தான செயற்பாடு என்பதை தெளிவுபடுத்தக்கூடிய அறிஞர்களின் பத்வாக்கள்

**கேள்வி :** எங்களின் பள்ளிவாயல்களில் ஷ.்.பானின் 15 ஆவது இரவில் மக்கள் ஒன்றுகூடி அதிலே யாஸீன் அத்தியாயத்தை 03 முறைகள் ஓதுவதுடன் மவ்லீத் ஓதக்கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள் (இதன் நிலைப்பாடு என்ன?)

**பதில் :** இது பித்அத்தாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ''நம்முடைய இந்த (மார்க்க) விவகாரத்தில் அதில் இல்லாததை எவன் புதிதாக உண்டாக்குகின்றானோ அவனுடைய அந்தப் புதுமை நிராகரிக்கப்பட்டதாகும்.''([34])

மற்றுமொரு ஹதீஸில் : ''நீங்கள் (மார்க்கத்தில்) புதுமையான விடயங்களை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள். நிச்சயமாக ஒவ்வொரு புதுமைகளும் பித்அத்களாகும். இன்னும் ஒவ்வொரு பித்அத்களும் வழிகேடுகளாகும்.''([35])

வணக்கவழிபாடுகள் என்பது ஏவல், விலக்கல், பின்பற்றுதல் என்ற அடிப்படைகளினால் உருவாக்கப்பட்டதாகும். இந்த (ஷ.்.பான் நடுப்பகுதி இரவை விழாவாகக்கொண்டாடும்) செயற்பாடானது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஏவல்களில் இல்லாத விடயமாகும். அத்துடன் இதனை நேர்வழிபெற்ற கலீபாக்களோ அல்லது ஸஹாபாக்களோ அல்லது தபீஈன்களோ எவரும் செய்ததாக கிடையாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக சில ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் வாசகங்களில் : ''யாரேனுமொருவர் ஒருசெயலை செய்து அதிலே எங்களின் ஏவுதல் இல்லையென்றால், அந்தவிடயம் நிராகரிக்கப்பட்டதாகும்.''([36])

இந்த செயற்பாடு நபியவர்களின் ஏவல்களில் இல்லாத விடயம் என்பதால் அது நிராகரிக்கப்படவேண்டும் என்பதுடன் அதிலே அல்லாஹ்வும் அவனது தூதரும் நிராகரித்த விடயங்கள் நுழைந்துள்ள காரணத்தினால் புரக்கணிக்கப்படவும் வேண்டும். அல்லாஹுத்தஆலா கூறுகிறான் : ''மார்க்கத்தில் அல்லாஹ் எதற்கு அனுமதியளிக்கவில்லையோ அதை அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக்கூடிய இணையாளர்கள்…'' (அத்தியாயம் : அஷ்ஷுரா, வசனம் : 21) இந்த (ஷ.்.பான் கொண்டாட்ட) விடயம் அல்லாஹ்வின் எந்தவித வழிகாட்டலும் இல்லாமல் மடையவர்களால் உருவாக்கப்பட்டதாகும். இது சம்பந்தமாக மரியாதைக்குரிய அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் பாஸ் (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஒரு தூதை

---

[34] ) ஆதாரம் : புஹாரி (2697), முஸ்லிம் (1718).

[35] ) ஆதாரம்: அஹ்மத் (17145), அபூதாவூத் (4607).

[36] ) ஆதாரம் : புஹாாரி (09/107), முஸ்லிம் (1718).

‘ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவையும், இஸ்ரா.ஃ. - மி.ஃ.ராஜ் இரவையும் கொண்டாட்டமாக எடுத்துக்கொள்வதின் சட்டம்’ என்ற தலைப்பில் எழுதியுள்ளார்கள்.([37])

***

## ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவை கொண்டாட்டமாக்கிக் கொள்வதின் சட்டம்

### (மதிப்பிற்குரிய அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ் றஹிமஹுல்லாஹ் அவர்களிடமிருந்து)

எங்களுக்கு மார்க்கத்தை பூரணப்படுத்தி, எங்கள் மீது அருள்களை சொரிந்த அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் -அல்ஹம்துலில்லாஹ்-. இன்னும் அவனின் நபியும் தூதருமான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

அல்லாஹுத்தஆலா கூறுகிறான் : ‘‘இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கிவைத்து விட்டேன். என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது முழுமையாக்கிவிட்டேன். இன்னும், உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக்கொண்டேன்.’’ (அத்தியாயம் : அல்மாயிதா, வசனம் : 03)

மேலும், அல்லாஹ் கூறுகிறான் : ‘‘மார்க்கத்தில் அல்லாஹ் எதற்கு அனுமதியளிக்கவில்லையோ அதை அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக்கூடிய இணையாளர்கள்…’’ (அத்தியாயம் : அஷ்ஷூரா, வசனம் : 21). புஹாரி, முஸ்லிம் கிரந்தத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ‘‘நம்முடைய இந்த (மார்க்க) விவகாரத்தில் அதில் இல்லாததை எவன் புதிதாக உண்டாக்குகிறானோ அவனுடைய அந்தப் புதுமை நிராகரிக்கப்பட்டதாகும்.’’([38])

முஸ்லிமில் பதிவுசெய்யப்பட்ட ஹதீஸில் , ஜாபிர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள் : ‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜும்ஆத் தின குத்பாவில் கூறுபவர்களாக இருந்தார்கள் : அம்மா பஅத் (இறைவாழ்த்துக்குப் பின்) உரைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம் (குர்ஆன்) ஆகும். வழிகாட்டலில் சிறந்தது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டலாகும். செயல்களில் தீயவை (மார்க்கத்தின் பெயரால்)

---

[37] ) பதாவா அல்-லஜ்னா அத்-தாயிமா லில்புஹூஸில் இல்மிய்யா வல்இப்தா.ஃ. (03/64).

[38] ) ஆதாரம் : புஹாரி (2697) , முஸ்லிம் (1718).

புதிதாக உண்டாக்கப்படுபவை ஆகும். (மார்க்கத்தின் பெயரால் புதிதாக உருவாக்கப்படும்) ஒவ்வொரு புதுமையும் வழிகேடு ஆகும்.''([39])

இதே கருத்துப்பட பல அல்குர்ஆன் வசனங்களும் , ஹதீஸ்களும் உள்ளன. அவைகள் அனைத்துமே, அல்லாஹு'த்தஆலா இந்த சமூகத்திற்கு அவனுடைய மார்க்கத்தை பூரணப்படுத்தி, அவர்களுக்கு அவனின் அருட்கொடைகளை நிறைவாக்கிவைத்துள்ளான் என்பதை தெளிவாக பறைசாட்டுகின்றன. எந்த நபிமார்களும் தங்களின் சமூகத்திற்கு சொல்லினாலும் செயலினாலும் அல்லாஹ்வினால் கடமையாக்கப்பட்டவைகளை தெளிவாக எத்திவைத்ததன் பின்னரே உயிரை கைப்பற்றப்படுவார்கள். இன்னும் தனக்குப் பின்னர் மக்களால் மார்க்கத்தின் பெயரால் உருவாக்கும் அனைத்துவிதமான புதுமையான விடயங்களும் நிராகரிக்கப்படவேண்டிய பித்அத்களாகும் என்பதை நபி ஸல்லல்லாஹு' அலைஹி வஸல்லம் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். அந்த விடயங்கள் நல்ல நோக்கத்திற்காக என்று இருந்தாலும் சரியே. நபியவர்களின் தோழர்கள் (மார்க்க) விடயத்தை தெளிவுபடுத்தியது போன்று அதன்பின்னர் வந்த இஸ்லாமிய அறிஞர்களும் பித்அத்களை நிராகரித்து, அவைகளை விட்டும் எச்சரிக்கை செய்தார்கள். அந்தவகையில் இப்னு வல்லாஹ், அத்தர்தூஷீ, அபூஷாமா போன்ற இன்னும் எத்தனையோ அறிஞர்கள் சுன்னாவின் முக்கியத்துவத்தையும், பித்அத்களை புரக்கணிப்பது சம்பந்தமான நூற்களை தொகுத்தார்கள்.

**சில மனிதர்களால் உருவாக்கப்பட்ட புதுமையான சில பித்அத்கள் :** ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை விழாவாக்கி அதன் பகல்பொழுதுகளை நோன்பு நோற்பதைக் கொண்டு சிறப்பிப்பதை ஆகுமாக்குவதற்கு எந்தவித ஆதாரங்களும் கிடையாது. ஆனாலும் அது தொடர்பாக பலவீனமான ஹதீஸ்கள் வந்துள்ளன. அவைகளை அடிப்படையாக வைத்து அவைகளை ஆகுமாக்க முடியாது. அத்தினத்திலே தொழுவதின் சிறப்பு தொடர்பாக வந்தவைகள் அனைத்தும் நபியவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளாகும் என அதிகமான அறிஞர்கள் எச்சரித்துள்ளார்கள். -இன்ஷா அல்லாஹ் அது தொடர்பான விடயங்களை பின்னர் வரும்.- அத்துடன் இத்தினம் சம்பந்தமாக ஷாம் பிரதேசத்து மற்றும் வேறு பிரதேசத்து முன்சென்ற அறிஞர்களின் சில அத்தாட்சிகளும் உள்ளன. அவைகளில் பெரும்பான்மையான அறிஞர்களின் ஒன்றுபட்ட கருத்து என்னவென்றால் ; அதனை ஒரு விழாவாக கொண்டாடுவது பித்அத்தான விடயமாகும். அத்துடன் அதன் சிறப்புக்கள் சம்பந்தமாக வரக்கூடிய அனைத்து அறிவிப்புக்களும் பலவீனமானதுடன், அவைகளில் சில நபியவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்டவைகளாகவும் உள்ளன. இது தொடர்பாக அல்ஹாபிழ் இப்னு ரஜப் அவர்கள் தனது 'லதாஇபுல் மஆரிப்' என்ற நூலில் எச்சரித்துள்ளார்கள். மேலும், 'எந்த வணக்கத்தின் அடிப்படை சம்பந்தமான ஒரு ஆதாரபூர்வமான ஹதீஸ் வந்துள்ளதோ அந்த வணக்கத்தில் தான் பலவீனமான ஹதீஸ்களை வைத்து செயற்பட முடியும்.' ஆனால், இந்த ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை விழாவாக கருதுவதற்கு பலவீனமான ஹதீஸ்களை வைத்து

[39] ) ஆதாரம் : முஸ்லிம் (2042).

நடைமுறைபடுத்துவதற்கு அடிப்படையான ஆதாரபூர்வமான ஒரு ஹதீஸ் கூடக் கிடையாது.

அபுல் அப்பாஸ் ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமியா றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறிய இந்த பாரிய விதியை நான் உங்களுக்கு பரிமாற்றுகின்றேன் : இந்த பிரச்சினை தொடர்பாக சில அறிஞர்கள் கூறிய விடயம் தொடர்பாக நீங்கள் தெளிவாக இருக்கவேண்டும். மனிதர்கள் முரண்படுகின்ற பிரச்சினைகளின் போது அவர்களுக்கு அல்குர்ஆனும் - சுன்னாவுமோ அல்லது அவைகளில் ஒன்றோ அதற்கு எந்த தீர்வை முன்வைக்கின்றனவோ அவைகளை பின்பற்றுவதே கடமையாகும். அவைகள் இரண்டிற்கும் மாற்றமானவைகளை புரந்தள்ளிவிடவேண்டும். அவைகள் இரண்டும் கூறாத ஒரு வணக்கம் நிச்சயமாக அது நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஆகுமற்ற ஒரு பித்அத்தாகும். அல்லாஹுத்தஆலா சூறதுந் நிஸாவில் பின்வருமாறு கூறுகிறான் : "நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்; உங்களில் ஏதாவது ஒரு விடயத்தில் பிணக்கு ஏற்படுமானால் - மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் -அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள்- இதுதான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும்." (அத்தியாயம் : அந்நிஸா, வசனம் : 59)

மேலும், அல்லாஹ் கூறுகிறான் : "நீங்கள் எந்த விடயத்தில் கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறீர்களோ, அதன் தீர்ப்பு அல்லாஹ்விடமே இருக்கின்றது." (அத்தியாயம் : அஷ்ஷூரா , வசனம் : 10)

மேலும், அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே! மனிதர்களிடம்,) நீர் கூறுவீராக; "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால்; என்னை நீங்கள் பின்பற்றுங்கள்; (அவ்வாறு நீங்கள் செய்தால்) உங்களை அல்லாஹ் நேசிப்பான்; உங்கள் பாவங்களையும் உங்களுக்காக அவன் மன்னித்து விடுவான்." (அத்தியாயம் : ஆலஇம்ரான் , வசனம் : 31)

மேலும், அல்லாஹ் கூறுகின்றான் : "உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில்; அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள்." (அத்தியாயம் : அந்நிஸா , வசனம் : 65)

இதே கருத்துப்பட இன்னும் பல வசனங்கள் உள்ளன. ஏதேனும் சட்டப்பிரச்சினைகளில் முரண்பாடு தென்படும்போது அல்குர்ஆன் - சுன்னாவின்பால் திரும்பவேண்டும் என்பதை வழியுறுத்துகின்றன. அத்துடன் அவைகள் இரண்டினதும் தீர்ப்பை திருப்தியாக ஏற்றுக்கொள்ளவதும் கடமையாகின்றது. அப்படி திருப்தியாக ஏற்றுக்கொள்வது ஈமானில் (நம்பிக்கையில்) உள்ளதுடன் , அல்லாஹ்வின்

அடியானுக்கு அச்சந்தர்ப்பத்திலோ அல்லது பின்னரோ அல்லது இறுதியிலோ நலவாகவே இருக்கும்.

இப்னு ரஜப் றஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது 'லதாஇபுல் மஆரிப்' என்ற நூலில் மேற்கூறப்பட்ட சட்டப்பிரச்சினைக்குப் பிறகு மேலும் கூறுகிறார்கள் : ஷாம் பிரதேசத்து தாபிஈன்களான காலித் பின் மஃதான், மக்ஹுல், லுக்மான் பின் ஆமிர் போன்றவர்கள் ஷஃபானின் நடுப்பகுதி இரவை கண்ணியப்படுத்துவதுடன், அதிலே வணக்கங்களைக் கொண்டு முயற்சிப்பார்கள். அவர்களைத் தொட்டும் இதன் சிறப்புக்களையும், கண்ணியத்தியத்தையும் மனிதர்கள் பெற்றுக்கொண்டார்கள். இவைகள் அனைத்தும், அவர்களை இஸ்ராஈலிய்யத்தான அத்தாட்சிகளில் இருந்து அவர்களை வந்தடைந்தன என்று கூறுப்படுகின்றன. இந்த விடயங்கள் அவர்களைத் தொட்டும் பல நாடுகளில் பரவி பிரபல்யம் பெற்றபொழுது அதனை, பஸரா பகுதி மக்களில் சில வணக்கவாளிகள் அதனை ஏற்று கண்ணியப்படுத்துவதில் உடன்பட்டார்கள். என்றாலும், ஹிஜாஸ் பகுதி அறிஞர்களான அதாஉ, இப்னு அபீ முலைகா போன்றோர் இதனை வெறுக்கின்றனர். மற்றும் மதீனா பகுதி சட்ட அறிஞர்களைத் தொட்டும் அப்துர் ரஹ்மான் பின் ஸைத் பின் அஸ்லம் அறிவிப்பதுடன் இமாம் மாலிக் றஹிமஹுல்லாஹ் அவர்களை சார்ந்தவர்கள் அனைவரும் கூறுகிறார்கள் : இவைகள் அனைத்தும் பித்அத்தாகும். என்றாலும், ஷாம் பிரதேசத்து அறிஞர்கள் மத்தியில் இந்த இரவை எப்படி உயிர்ப்பிக்கவேண்டும் என்று இருதரப்பட்ட கருத்து முரண்பாடுகள் இருக்கின்றன :

**முதலாவது :** அந்த இரவை அனைவரும் பள்ளிவாயலில் ஒன்று சேர்ந்து உயிர்ப்பிப்பது விரும்பத்தக்கதாகும். காலித் இப்னு மஃதான், லுக்மான் பின் ஆமிர் போன்றவர்கள் இத்தினத்தில் மிகவும் அழகான ஆடைகளை அணிந்து நறுமணம் பூசி, கண்களுக்கு சுர்மா இடுவார்கள். அத்துடன் அவர்களின் அவ்விரவை பள்ளிவாயலில் இருப்பார்கள். இந்த செயற்பாடுகளை இஸ்ஹாக் பின் ராஹுவைஹி அவர்கள் உடன்படுகிறார்கள். இத்தினத்தில் பள்ளிவாயல்களில் கூட்டாக நின்று வணக்குவது ஒரு பித்அத்தான செயற்பாடு அல்ல என்று இமாம் இஸ்ஹாக் பின் ராஹுவைஹி அவர்கள் கூறியதாக 'ஹர்புல் கிர்மானீ' அவர்கள் தனது 'மஸாயில்' என்பதில் பதிவு செய்துள்ளார்கள்.

**இரண்டாவது :** "இத்தினத்தில் தொழுகைக்காகவும், கதைகள் கூறவும், பிரார்த்திப்பதற்காகவும் என்று பள்ளிவாயல்களில் ஒன்றுகூடுவது வெறுக்கத்தக்கதாகும். என்றாலும் ஒருவன் தனக்காக தனியாகத் தொழுவது வெறுக்கத்தக்கதல்ல." இக்கூற்று ஷாம் பிரதேசத்து இமாமும், அறிஞரும், சட்டமேதையுமான அல்அவ்ஸாஈ றஹிமஹுல்லாஹ் அவர்களின் நிலைப்பாடாகும். இமாம் அஹ்மத் அவர்களின் ஷஃபானின் நடுப்பகுதி இரவு பற்றிய நிலைப்பாடு என்னவென்று அறியப்படமாட்டாது. என்றாலும் அவர்களின் இரண்டு அறிவிப்புக்களைக் கொண்டு அன்றைய தினத்தின் இரவில் நின்று வணங்குவது விரும்பத்தக்கது என்ற முடியை பெறலாம். பெருநாள் தின இரவுகளிலும் நின்று வணங்குவது தொடர்பாக அவர்களைத் தொட்டும் வரும் இரண்டு அறிவிப்புகளாகும். அவைகளில் ஒரு அறிவிப்பில்; கூட்டாக தொழுவது விரும்பத்தக்கதல்ல. ஏனெனில், நபியவர்களைத் தொட்டோ அல்லது அவர்களின்

தோழர்களைத் தொட்டோ எந்தவித அறிவிப்புக்களும் கிடையாது என்பதால். மற்றொரு அறிவிப்பில் ; அன்றைய தினத்தில் நின்று வணங்குவது விரும்பத்தக்கதாகும். ஏனெனில், தாபிஈன் அப்துர் ரஹ்மான் பின் யஸீத் பின் அல்அஸ்வத் அவர்களின் செயற்பாட்டை காரணமாக வைத்து. இதேபோன்றுதான் ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் நின்று வணங்குவது தொடர்பாக நபியவர்கள் தொட்டோ அல்லது ஸஹாபாக்களைத் தொட்டோ ஆதாரபூர்வமானவைகள் இல்லையென்றாலும் அதற்கான ஆதாரமாக தாபிஈன்களின் ஒரு கூட்டத்தினரதும், ஷாம் பிரதேசத்து சட்டமேதைகளின் செயற்பாடும் ஆதாரமாக உள்ளது என்ற அடிப்படையில்.

''நபியவர்களைத்தொட்டோ அல்லது அவர்களின் தோழர்களைத்தொட்டோ ஷ.்.பானின் நடுப்பகுதி இரவு தொடர்பாக எந்தவித செய்திகளும் ஆதாரபூர்வமானதாக இல்லை'' என்ற அல்ஹாபிழ் இப்னு ரஜப் றஹிமஹுல்லாஹ் அவர்களின் தெளிவான கூற்றே இந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடியதாக இருக்கின்றது.

என்றாலும், 'தனித்தவர்களாக அந்த இரவில் நின்று வணங்குவது விரும்பத்தக்கது' என்ற இமாம் அல்அவ்ஸாஈ றஹிமஹுல்லாஹ் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்தைப் பொருத்தவரையில், இது விசித்திரமான பலவீனமான கருத்து என்று அல்ஹாபிழ் இப்னு ரஜப் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள். ஏனெனில், அதனை மார்க்க சட்டமாக ஆக்குவதற்கு காட்டப்படும் ஆதாரங்கள் எந்தவித உறுதித்தன்மையுமற்றதாகும். எனவே, ஒரு முஸ்லிம் தனியாகவோ அல்லது கூட்டாகவோ அல்லது வெளிப்படையாகவோ அல்லது மறைவாகவோ அல்லாஹ்வின் மார்க்கத்தில் புதிதாக ஒரு விடயத்தை உருவாக்குவது என்பது ஆகுமற்றதாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''நம்முடைய இந்த (மார்க்க) விவகாரத்தில் அதில் இல்லாததை எவன் உண்டாக்குகின்றானோ அவனுடைய அந்தப் புதுமை நிராகரிக்கப்பட்டதாகும்.''([40]) இதுபோன்று பித்அத்தை தடுக்கக்கூடிய, அதனை விட்டும் எச்சரிக்கை செய்து சுட்டிக்காட்டக்கூடிய இன்னும் எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன.

இமாம் அபூபக்கர் அத்தர்தூஸி றஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது 'அல்ஹவாதிஸ் வல்பித.்.' என்ற நூலில் பின்வருமாறு கூறிப்பிடுகின்றார்கள் : ஸைத் பின் அஸ்லம் அவர்களைத் தொட்டும் இப்னு வல்லாஹ் அறிவிப்பதாக கூறினார்கள் : 'எங்களின் ஆசிரியர்கள், மார்க்க சட்ட அறிஞர்களில் ஒருவரைக் கூட ஷ.்.பானின் நடுப்பகுதியைப் பற்றியோ அல்லது மக்ஹுலின் ஹதீஸையோ ஏறெடுத்தும் பார்ப்பவர்களாக அவர்களை நாங்கள் கண்டுகொள்ளவில்லை.' ''இப்னு அபீ மலீகா அவர்களிடம் கூறப்பட்டது : 'நிச்சயமாக ஷ.்.பானின் நடுப்பகுதி இரவின் கூலி - லைலதுல் கத்ர் இரவின் கூலியைப் போன்றதாகும்' என 'ஸியாத் அன்னுமைரிய்யு' கூறுகிறார் என்று கூறப்பட்டது. அதற்கு இப்னு அபீமலீகா

---

[40] ) ஆதாரம் : புஹாரி (09/107) , முஸ்லிம் (1718).

அவர்கள் கூறினார்கள் : 'என்னுடைய கையில் தடியொன்று இருக்கின்ற நிலைமையில் ஸியாத் கூறுவதை செவிமடுத்திருந்தால்; நிச்சயமாக நான் அவரை அடித்திருப்பேன். இன்னும் ஸியாத் என்பவர் கதைசொல்பவர்களில் ஒருவராக இருந்தார்.''

இமாம் அஷ்ஷவ்கானி றஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது 'அல்பவாஇத் அல்மஜ்மூஆ' எனும் நூலில் பின்வருமாறு கூறிப்பிடுகின்றார்கள் : ''அலீயே! யாரேனுமொருவர் ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் 100 ரக்ஆத்துக்கள் தொழுது, ஒவ்வொரு ரக்ஆத்திலும் பாதிஹா அத்தியாயத்திற்குப் பிறகு 'குல்ஹுவல்லாஹு அஹத்' எனும் அல்இஹ்லாஸ் அத்தியாயத்தை 10 தடவைகள் ஓதுகின்றாரோ அவருக்கு அல்லாஹுத்தஆலா அவருடைய தேவையை தீர்த்துவைக்கின்றான்'' என்ற ஹதீஸ்; நபியவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட போலியான செய்தியாகும். இதனை நடைமுறைப்படுத்துபவன் பெறக்கூடிய நன்மைகள் தொடர்பாக வந்திருப்பவைகளால் ; இது இட்டுக்கட்டப்பட்டது என்பதை பிரித்தரிய முடியாத அளவிற்கும், அதில் எந்த மனிதனும் சந்தேகப்படாத விதத்திலும் இதன் வார்த்தைப் பிரயோகங்கள் இருக்கின்றன. இன்னும் இதன் அறிவிப்பாளர்கள் அறியப்படாதவர்களாக இருக்கின்றார்கள். சுருக்கமாகக் கூறுவது என்றால்; ஷ.்.பானின் நடுப்பகுதி இரவுத்தொழுகை சம்பந்தமான ஹதீஸ் நிராகரிக்கப்பட்டதாகும். இப்னு ஹிப்பான் அறிவிக்கக்கூடிய அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸான : ''ஷ.்.பானின் நடுப்பகுதி இரவானால், அதன் இரவில் நின்று வணங்கி – அதன் பகல்பொழுதுகளில் நோன்பு பிடியுங்கள்'' என்ற ஹதீஸ் பலவீனமானதாகும். ''அல்இஹ்லாஸ் அத்தியாயத்தை 10 தடவைகள் ஓதுவதன் மூலம் 100 ரக்ஆத்துக்கள் தொழுதல்'' அதன் நீண்ட சிறப்பு பற்றி 'அல்-லஆலீ' என்ற நூலிலும், தைலமியும் குறிப்பிட்டது நபியவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும். மூன்று வழிமுறைகளிலும் வரக்கூடிய பெரும்பான்மையான அறிவிப்பாளர்கள் அறியப்படாத பலவீனமானவர்கள். ஹதீஸ்: ''அல்இஹ்லாஸ் அத்தியாயத்தை 30 தடவைகள் ஓதுவதைக்கொண்டு 12 ரக்ஆத்துக்கள் தொழுவது'' இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும். மேலும், ''14 ரக்ஆத்துக்கள்'' என்பதும் இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும்.

'அல்இஹ்யா' என்ற புத்தகங்களின் உரிமையாளர்கள் போன்ற சில மார்க்க சட்ட அறிஞர்களுக்கும், அல்குர்ஆன் விளக்கவுரையாளர்களுக்கும் இந்த ஹதீஸ்; அவர்களை மதிமயக்கிவிட்டது என்றே கூறவேண்டும். ஷ.்.பானின் நடுப்பகுதி இரவு தொடர்பாக வந்த பலதரப்பட்ட வித்தியாசமான அறிவிப்புக்கள் அனைத்தும் நபியவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட நிராகரிக்கப்பட்டதாகும். மேற்கூறப்பட்ட இந்த ஹதீஸ், ''அல்லாஹுத்தஆலா ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் பூமிக்கு அண்மையில் உள்ள வானத்தின்பால் வந்து, கல்ப் கோத்திரத்து ஆட்டின் உரோமங்களை விட அதிகமானவர்களை மன்னிப்பான்'' என்ற திர்மிதியில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸால் இட்டுக்கட்டப்பட்டது என்ற நிலைப்பாட்டிலிருந்து இல்லாமலாக்கிவிடாது. மேற்கூறப்பட்ட கூற்றுக்களோ ஷ.்.பானின் நடுப்பகுதியில் நின்றுவணங்குவது தொடர்பாக வந்தவைகள் தான் இட்டுக்கட்டப்பட்டவைகள் என்று கூறப்படுகின்றன. என்றாலும், ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் பலவீனமாதுடன் அதில் அறிவிப்பாளர்கள் வரிசை தொடர்பற்று காணப்படுகின்றது. அதேபோன்று

ஆரம்பத்தில் கூறப்பட்ட அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸும் கூட இத்தொழுகை இட்டுக்கட்டப்பட்டது என்ற நிலைப்பாட்டிலிருந்து இல்லாமலாக்கிவிடாது. என்றாலும் அந்த ஹதீஸும் கூட பலவீனமானதாகும்.

அல்ஹாபிழ் அல்இராகீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : ஷ.்.பானின் நடுப்பகுதி இரவுத் தொழுகை சம்பந்தமாக வரக்கூடிய ஹதீஸ் நபியவர்கள் மீது போலியாக இட்டுக்கட்டப்பட்டவைகளாகும். இமாம் நவவீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது ‘அல்மஜ்மூ.்.’ எனும் நூலில் : ‘ரஆஇப் தொழுகை’ என்று சொல்லக்கூடிய அதிக நன்மைகளை ஈட்டித்தரக்கூடிய அறியப்பட்ட தொழுகையாக; ரஜப் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை இரவில் ம.்.ரிப் மற்றும் இஷாத் தொழுகைகளுக்கு மத்தியில் 12 ரக்ஆத்துக்கள் தொழுவது, ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் 100 ரக்ஆத்துக்கள் தொழுவது ஆகிய இரண்டு தொழுகைகளும் தடுக்கப்பட்ட பித்அத்துகளாகும். அத்துடன் ‘கூதுல் குலூப்’ , ‘இஹ்யாஉ உலூமுத் தீன்’ ஆகிய இரண்டு புத்தங்களில் அவைகள் சம்பந்தமான ஹதீஸ்கள் மதிமயக்கி ஏமாற்றி விடவேண்டாம். ஏனெனில், அவைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டதாகும். அதேபோன்று இவைகள் இரண்டும் ஆகுமானது என்ற நிலைபாட்டில் அதிலே மூழ்கி தொகுக்கப்படுள்ள சில அறிஞர்களது தீர்ப்புக்களும் மதியமக்கி ஏமாற்றிவிடவும் வேண்டாம்.

இவை (தொழுகைகள்) இரண்டும் ஆதாரமற்றவை, புறக்கணிக்கப்பட வேண்டியவை என்பதை வழியுறுத்தும் முகமாக அஷ்ஷெய்க் அபூ முஹம்மத் அப்துர் ரஹ்மான் பின் இஸ்மாஈல் அல்மக்திஸீ அவர்கள் ஒரு நூலை மிகவும் அழகான முறையில் தொகுத்துள்ளார்கள். இந்த மார்க்க சட்டப்பிரச்சினை சம்பந்தமாக மார்க்க அறிஞர்களின் கருத்துக்கள் அதிகமாக உள்ளன. அவைகள் தொடர்பாக நாங்கள் வாசித்த அனைத்தையும் இங்கே குறிப்பிடப்போனால் அதற்கு என்றே வார்த்தைகளும் பக்கங்களும் நீண்டுவிடும். ஆகையால், சத்தியத்தை தேடக்கூடிய ஒருவனுக்கு போதுமான விடயங்களுடன் மாத்திரம் போதுமாக்கிக் கொண்டோம்.

ஆரம்பத்தில் கூறப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள், அறிஞர்களின் கூற்றுக்கள் மூலம்; ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் தொழுகை போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் மூலம் விழாக்கொண்டாட்டம் பூண்டுவதும், அதன் பகல் பொழுதுகளை நோன்பு நோற்பதைக் கொண்டும் சிறப்பிப்பதும் வெறுக்கத்தக்க பித்அத்களில் ஒன்று என்பதுடன், அவைகளுக்கு மார்க்கத்தில் எந்தவித அடிப்படையும் கிடையாது என்பதையும் சத்தியத்தை தேடக்கூடிய ஒருவன் கண்டுகொள்வான். இவைகள் அனைத்தும் ஸஹாபாக்களின் காலத்திற்குப் பிறகு இஸ்லாத்தில் புதிதாக உருவாக்கப்பட்டவைகளாகும். மேலும், அல்லாஹ்வின் கூற்றான : “இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கிவைத்து விட்டேன்.” (அத்தியாயம் : அல்மாயிதா, வசனம் : 03) இதே கருத்துப்பட இன்னும் பல வசனங்களும், நபியவர்களின் வார்த்தையாகிய : “நம்முடைய இந்த (மார்க்க) விவகாரத்தில் அதில் இல்லாததை எவன் புதிதாக உண்டாக்குகிறானோ அவனுடைய அந்தப் புதுமை நிராகரிக்கப்பட்டதாகும்.”([41]) இதே கருத்தும்பட இன்னும் பல ஹதீஸ்களும் வந்துள்ளன. நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா றழியல்லாஹு அன்ஹு

[41] ) ஆதாரம் : புஹாரி (2697), முஸ்லிம் (1718).

அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் முஸ்லிம் கிரந்தத்தில் பதிவுசெய்யப்பட்டதில் ; நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ‘‘இரவுகளில் வெள்ளிக்கிழமை இரவைமட்டும் இரவுத் தொழுகைக்காகத் தேர்ந்தெடுக்காதீர்கள். தினங்களில் வெள்ளிக்கிழமை தினத்தை மட்டும் நோன்பு நோற்பதற்காகத் தேர்ந்தெடுக்காதீர்கள்; உங்களில் ஒருவர் (வழக்கமாக) நோன்பு நோற்கும் நாள் வெள்ளிக்கிழமையாக அமைந்துவிட்டாலே தவிர.’’([42])

ஏதேனுமொரு இரவை வணக்கங்களைக் கொண்டு சிறப்பிப்பது ஆகுமானது என்றிருந்தால்; வெள்ளிக்கிழமை இரவுதான் அதற்கு மிகவும் தகுதியான பொருத்தமான தினமாகும். ஏனெனில், அத்தினம் தான் சூரியன் உதிக்கக்கூடிய நாட்களில் சிறந்த நாளாக இருக்கின்றது என்று நபியவர்களைத் தொட்டும் அறிவிக்கக்கூடிய ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் எடுத்தியம்புகின்றன. அப்படி இருந்தும் கூட, இந்த வெள்ளிக்கிழமை இரவை சிறப்பிப்பதையே நபியவர்கள் எச்சரித்திருக்கின்றபோது, ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் வந்திருக்கும் சிறப்புமிக்க இரவுகளைத் தவிர மற்றஇரவுகளை இபாதத்களால் சிறப்பிப்பதோ இதனைவிடவும் பாரதூரமான விடயமாகும்.

லைலதுல் கத்ர் மற்றும் ரமழான் இரவுகளில் நின்று வணங்குதல், அதிலே முயற்சிசெய்தல் போன்ற விடயங்கள் மார்க்கமாக ஆக்கப்பட்டுள்ளதுடன்; நபியவர்கள்; தானும் செய்து , சமூகத்தையும் அதன்பால் உற்சாகமூட்டியுள்ளார்கள். புஹாரி , முஸ்லிம் கிரந்தங்களில் பதிவுசெய்யப்பட்ட ஹதீஸ்களில்; நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ‘‘யார் ரமழானில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தும் நின்று வணங்குகிறானோ அவனின் முன்செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்.’’([43]) ‘‘மேலும், யார் லைலதுல் கத்ர் இரவை நம்பிக்கையுடனும், நம்மையை எதிர்பார்த்தும் நின்று வணங்குகிறானோ அவனின் முன்செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்.’’([44])

ஷ.்.பானின் நடுப்பகுதி இரவோ அல்லது ரஜப் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை இரவோ அல்லது இஸ்ரா.். - மி.்.ராஜ் இரவையோ விழாக்கொண்டாட்டம் பூண்டுவதையோ அல்லது அதனை வணக்கவழிபாடுகளால் சிறப்பிப்பதோ மார்க்கம் என்றிருந்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தானும் அதனை நடைமுறைப்படுத்தி தன் சமூகத்திற்கும் அதனை செய்யுமாறு வழிகாட்டி இருந்திருப்பார்கள். அல்லது அப்படி ஏதேனும் ஒன்று நபியவர்களின் வாழ்வில் நடந்திருந்தால்; அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்ட, நபிமார்களுக்குப் பிறகு மனிதர்களில் சிறந்த சமூகமான ஸஹாபாக்கள் அதனை எங்களுக்கு அறிவித்திருப்பார்கள். மேலும், ரஜப் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை இரவின் சிறப்பைப்பற்றியும், ஷ.்.பானின் நடுப்பகுதி இரவைப்பற்றியும் நபியவர்களைத் தொட்டோ அல்லது அவர்களின் தோழர்களைத்தொட்டோ எந்தவித ஆதாரபூர்வமான செய்திகளும் கிடையாது என்பதை; ஆரம்பத்தில் கூட உங்களுக்கு இஸ்லாமிய அறிஞர்கள் சிலரின் கூற்றுக்களின் மூலம் எடுத்துக்காட்டியிருந்தேன். எனவே, அந்த இரண்டு தினங்களையும் விழாக்கொண்டாட்டம் பூண்டுவது, அதன் இரவுகளை

---

[42] ) ஆதாரம் : முஸ்லிம் (1144).

[43] ) ஆதாரம் : புஹாரி (37), முஸ்லிம் (759).

[44] ) ஆதாரம் : புஹாரி (2014), முஸ்லிம் (760).

இபாதத்களால் சிறப்பது போன்ற விடயங்கள் இஸ்லாத்தில் நுழைக்கப்பட்ட பித்அத்களாகும். இவைகள் எப்படி கூடாதோ, அதேபோன்றுதான் ரஜப் மாதத்தின் 27ஆம் இரவன்று நபியவர்கள் மி.ஃ.ராஜ் பயணத்தை மேற்கொண்டார்கள் என்று கருதி அத்தினத்தை இபாதத்களால் சிறப்பிப்பதும் கூட வெறுக்கத்தக்க பித்அத்களாகும். நபியவர்கள் ரஜப் மாதத்தின் 27 ஆவது இரவன்றுதான் மி.ஃ.ராஜ் பயணம் மேற்கொண்டார்கள் என்ற கூற்றுக்கு எந்தவித ஆதாரபூர்வமான ஹதீஸ்களோ, அடிப்படையோ கிடையாது. கூறப்பட்டவைகளில் மிகவும் அழகான கூற்றாக ;

நேர்வழியின் அடிப்படையில் அமைந்தவைகளே முன்சென்ற செயல்களில் மிகவும் சிறந்த செயல்கள்

புதிதாக உருவாக்கப்பட்டவைளோ நூதண விடயங்களில் கெட்டவிடயங்கள்

நானும், மற்ற முஸ்லிம்களும் நபியவர்களின வழிமுறைகளை பின்பற்றவும், அதிலே நிலைத்து நிற்கவும், அவற்றுக்கு முரணானவைகளை விட்டும் புறந்தள்ளி இருக்கவும்; எங்களுக்கு அருள்பாளிக்க அல்லாஹ் ஒருவன் மாத்திரமே பொறுப்பாளனாக இருக்கின்றான். அல்லாஹுத்தஆலா கொடையாளனாக இருக்கின்றான். அல்லாஹ்வின் அடியாரும் தூதருமான, எங்கள் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தார், அன்னாரின் தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!([45])

***

## அஷ்ஷெய்க் மஹ்மூத் ஷல்தூத் -றஹிமஹுல்லாஹ்- (முன்னால் எகிப்து அறிஞர்) :

ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவிற்கு என்று அல்லாஹ்விடத்தில் சிறப்பான இடமொன்று இருக்கின்றது என்று எண்ணி; அத்தினத்தை திக்ருகளாலும், இபாதத்களாலும், பிரார்த்தனைகள், அல்குர்ஆன் ஓதுதல் போன்ற செயற்பாடுகளால் உயிர்ப்பிப்பதற்காக வேண்டி பள்ளிவாயல்களில் ஒன்றுகூடி ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவுத்தொழுகை என்ற பெயரில் ஒரு தொழுகையை தொழுது, பிறகு யாஸீன் அத்தியாயத்தை ஓதி பிறகு ஷ.ஃ.பான் நடுப்பகுதி பிரார்த்தனை என்ற ஒன்றில் ஈடுபடுவது தொடர்பாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொட்டோ அவர்களின் தோழர்களைத்தொட்டோ ஆதாரபூர்வமான எந்த அறிவிப்புக்களும் கிடையாது. என்றாலும், ஷ.ஃ.பானில் அதிகமாகவோ அல்லது முழுமையாகவோ நோன்பு பிடிப்பது தொடர்பாக மாத்திரமே ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் வந்துள்ளன.([46])

***

---

45 ) மஜ்மூஉ பதாவா வ மகாலாத் முதனவ்விஆ - அஷ்ஷெய்க் பின் பாஸ் றஹிமஹுல்லாஹ் : (01/186).

46 ) அல்பதாவா – அஷ்ஷெய்க் மஹ்மூத் ஷல்தூத் (பக்கம் : 188).

# ஷ.ஃ.பான் மாதத்தில் ஆதாரமற்ற ஹதீஸ்கள்

நிச்சயமாக ஷ.ஃ.பானின் நடுப்பகுதியில் நோன்பு நோற்கவோ அல்லது அதில் நின்றுவணங்கவோ என்று சிறப்பிப்பதற்கு ஆதாரபூர்வமான எந்த ஹதீஸ்களும் கிடையாது என்பதை அறிந்துகொள்ளுங்கள் -அல்லாஹுத்தஆலா எனக்கும் உங்களுக்கும் அருள்பாளிப்பானாக-. அதிலே, நோன்பு நோற்பது மற்றும் தொழுவது போன்றதைக்கொண்டு சிறப்பிப்பது எந்தவித அடிப்படையுமற்ற வெறுக்கத்தக்க பித்அத்களில் உள்ளதாகும். எனவே, இது சம்பந்தமான பிரபல்யமான ஆதாரமற்ற சில ஹதீஸ்கள் உங்கள் முன்னிலையில் ;

1- ஹதீஸ் : ''ஷ.ஃ.பான் மாதத்தின் சிறப்பானது எனக்கும் மற்ற நபிமார்களுக்கும் மத்தியில் இருக்கின்ற சிறப்பைப் போன்றதாகும்.'' இப்னு ஹஜ்ர் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : இந்த ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டதாகும் என்ற இக்கருத்தை அவரின் புத்தகமான 'தப்ஈனுல் உஜுபில்' குறிப்பிட்டுள்ளார்.([47])

2- ஷ.ஃ.பானின் நடுப்பகுதி பகலை நோன்பு நோற்பதைக் கொண்டும், அதன் இரவுப்பகுதியை நின்று வணங்குவதைக் கொண்டும் சிறப்பிப்பது சம்பந்தமான ஹதீஸ் : ''ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவை அடைந்தால், அதன் இரவில் நின்றுவணங்கி அதன் பகல்பொழுதில் நோன்பு பிடியுங்கள்.''([48])

3- ஹதீஸ் : ''ஐந்து இரவுகளில் கேட்கப்படும் பிரார்த்தனைகள் நிராகரிக்கப்படமாட்டாது ; ரஜபின் முதல் இரவு, ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவு, ஜுமுஆதின இரவு, நோன்புப்பெருநாள் இரவு, ஹஜ்ஜுப்பெருநாள் இரவு.''([49])

4- ஹதீஸ் : ''ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்னிடம் வந்து கூறினார்கள் : ''இது ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவாக இருக்கின்றது. அல்லாஹுத்தஆலா இந்த இரவில் கல்ப் கோத்திரத்து ஆட்டு ரோமங்களின் அளவிற்கு நரகிலிருந்து விடுவிக்கப்படக்கூடியவர்கள் இருக்கின்றார்கள்.''([50])

5- ஹதீஸ் : ''அலியே (றழியல்லாஹு அன்ஹு)! யாரேனுமொருவர் ஷ.ஃ.பானின் நடுப்பகுதி இரவில் 100 ரக்ஆத்துக்கள் தொழுது அதிலே 1000 முறை 'குல்ஹுவல்லாஹு அஹத்' என்பதை ஓதினாள் ; அந்த இரவில் அவன் கேட்ட அனைத்து தேவைகளையும் அல்லாஹ் நிவர்த்தி செய்துவிடுவான்.''([51])

---

47 ) 'தப்ஈனுல் உஜுப்' (பக்கம் : 13-14)

48 ) 'ஸில்ஸிலதுல் அஹாதீஸ் அழ்ழஈபா' –அல்பானீ றஹிமஹுல்லாஹ்- (2132) :இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்பாளர்களைக் கொண்டது என்றார்கள்.

49 ) 'ஸில்ஸிலதுல் அஹாதீஸ் அழ்ழஈபா' (1452).

50 ) இமாம் அல்பானீ அவர்கள் - 'ழஈபுத் தர்ஙீப் வத்தர்ஹீப்' (1651) : பலவீனமானது என்கின்றார்கள்.

51 ) 'அல்அஸ்ரார் அல்மர்பூஆ பில் அஹ்பார் அல்மவ்ழூஆ' - அல்மலா அலி அல்காரீ (பக்கம் : 439-440).

6- ஹதீஸ் : ''யார் ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் 1000 முறை 'குல்ஹுவல்லாஹு அஹத்' என்பதை ஓதுகிறாரோ , அவருக்கு அல்லாஹுத்தஆலா 1000 மலக்குமார்களை அனுப்பிகிறான். அவர்கள் அவனுக்கு நன்மாராயம் கூறுவார்கள்.''([52])

7- ஹதீஸ் : ''யார் ஷ.்.பானின் நடுப்பகுதியில் 13 ரக்ஆத்துக்கள் (மற்றுமொரு அறிவிப்பில் 12 ரக்ஆத்துக்கள்) தொழுது அதிலே ஒவ்வொரு ரக்ஆத்திலும் 30 முறைகள் 'குல்ஹுவல்லாஹு அஹத்' என்பதை ஓதினால் நரகம் கடமையாக்கப்பட்ட 10 நபர்களுக்கு சிபாரிசு வழங்கப்படும்.''([53])

8- ஹதீஸ் : ''யார் இரு பெருநாள் தின இரவுகளையும், ஷ.்.பான் நடுப்பகுதி இரவுகளையும் உயிர்ப்பிக்கின்றானோ; அப்படிப்பட்டவனின் உள்ளமானது - உள்ளங்கள் மரணிக்கும் நாளில் மரணிக்காது.''([54])

9- ஹதீஸ் : ''யார் ஐந்து இரவுகளை உயிர்ப்பிக்கின்றானோ அவனுக்கு சுவனம் கடமையாகின்றது: துல்ஹஜ் பிறை 08 , 09 , 10 இரவுகள் மற்றும் நோன்புப் பெருநாள் இரவு , ஷ.்.பான் நடுப்பகுதி இரவு.([55])

***

## ரமழான் மாதத்திற்கு தயாராகும் முகமாக இம்மாதத்தை அழகான முறையில் பயன்படுத்துவதற்கான சில உபதேசங்கள்

**ரமழான் மாதத்தை அடைந்துகொள்வதற்காக வேண்டி அல்லாஹ்விடம் அதிகம் வேண்டுதல்.**

**சிலவேளை தனது வாழ்வில் அடையக்கூடிய இறுதி ரமழானாக இருக்கலாம், ஆதலாம் அதிகமாக நல்லமல்களை செய்வதாக உறுதிபூணுதல்.**

**அல்லாஹ்வின் கட்டளைப்பிரகாரம் கலப்பற்ற பாவமன்னிப்பு வேண்டுதல் :** ''விசுவாசிகளே! கலப்பற்ற தவ்பாவாக (தூய மனதுடன் பாவத்திலிருந்து விலகி) அல்லாஹ்வின்பால் நீங்கள் தவ்பாச் செய்யுங்கள்.'' (அத்தியாயம் : அத்தஹ்ரீம், வசனம் : 08)

---

52 ) லிஸானுல் மீஸான் - இப்னு ஹஜ்ர் (05/271)

53 ) அல்அஸ்ரார் அல்மர்பூஆ பில் அஹ்பார் அல்மவ்ழூஆ (பக்கம் : 440) , அல்மவ்ழூஆத் (02/192) , இப்னுல் ஜவ்ஸி றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : இது இட்டுக்கட்டப்பட்டதாகும், மேலும் இதிலே அறியப்படாத கூட்டமொன்றே உள்ளது.

54 ) அல்-இலல் அல்முதனாஹிலா (பக்கம் : 924).

55 ) ழஈபுத் தர்ஙீப் வத்தர்ஹீப் - இமாம் அல்பானீ (667).

**ஆரம்ப தக்பீருடன் ஐவேளைத் தொழுகைகளையும் கூட்டாகத் தொழுதல் :** அல்லாஹுத்தஆலா கூறுகிறான் : ‘‘நீங்கள் (ஐவேளைத்) தொழுகைகளைப் பேணிக்கொள்ளுங்கள். மேலும், (தொழுகையில்) அல்லாஹ்வுக்கு (ப் பயந்து) பணிந்தவர்களாக நில்லுங்கள்.’’ (அத்தியாயம் : அல்பகரா , வசனம் : 238)

மேலும் அல்லாஹ் கூறுகிறான் : ‘‘நிச்சயமாக தொழுகை விசுவாசிகளின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கிறது.’’ (அத்தியாயம் : அந்நிஸா , வசனம் : 103)

**பாரிய கூலிகளை அடங்கிய உபரியான சுன்னத்தான தொழுகைகளை பேணுதல் :** ஸஹீஸ் முஸ்லிமில் பதிவு செய்யப்பட்ட ஹதீஸில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவி உம்மு ஹபீபா றழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள் : ‘‘றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவிமடுத்தேன் ; ஒரு முஸ்லிமான அடியார் ஒவ்வொரு நாளும் கடமையான தொழுகைகள் தவிர கூடுதலாகப் 12 ரக்அத்துக்கள் தொழுதால் ‘அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தில் ஓர் இல்லத்தை எழுப்புகிறான்’ அல்லது ‘அவருக்காகச் சொர்க்கத்தில் ஓர் இல்லம் எழுப்பப்படுகிறது’.’’([56])

**அதிகமான நோன்புகள் நோற்பதில் மும்முரமாக இருத்தல்** : ஒவ்வொரு வாரமும் திங்கள் , வியாழக் கிழமைகள், அரபு மாத அடிப்படையில் பிறை 13, 14, 15 போன்ற தினங்களில் நோன்பு நோற்றல் அல்லது தாவுத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் நோன்பான ஒருநாள் விட்டு ஒருநாள் நோன்பு பிடித்தல் போன்ற உபரியான நோன்புகளை இம்மாதத்தில் அதிகமாக நோற்றல்.

**குர்ஆனுடைய மாதத்தை வரவேற்கும் முகமாக அதிகமாக அல்குர்ஆனை ஓதுவதில் பேணுதலாக இருத்தல் :** சில முன்சென்ற அறிஞர்கள் இந்த ஷ.்.பான் மாதத்தை ‘குர்ஆன் ஓதுபவர்களின் மாதம்’ என்று பெயர்சூட்டுபவர்களாக இருந்தார்கள். இன்னும் சிலர், ஷ.்.பானை நுழைந்தால் ; ‘இது குர்ஆன் ஓதுபவர்களின் மாதமாகும்’ என்றும் கூறுவார்கள். மற்றும் ‘அவர்கள் ஷ.்.பான் மாதத்தை நுழைந்தால் அவர்களுடைய வியாபார நிலையங்களை மூடிவிட்டு குர்ஆனை ஓதுவதற்காக வேண்டி ஒதுங்கிவிடுவார்கள்’ என்று ஒருசிலரிடமிருந்து கூறப்பட்டது.

**மற்றவர்களுக்கு கொடுக்கவேண்டிய கடனை அவர்களிடமே திருப்பிக்கொடுத்து அதிலிருந்து நீங்கிவிடுதல் :** இதனால் வருகின்ற மாதத்தை எந்தவித சிந்தனையுற்ற நிலையில் அடையலாம். ஒருவனின் கவலையை அல்லாஹ்வைத்தவிர வேறு எவரும் பொறுப்பெடுக்கமாட்டார்கள்.

**மேலதிகமான உபரியான திக்ருகளை உள்ளத்திற்கு எடுத்து நாவால் கூறுவதை பேணுதலாக எடுத்துக்கொள்ளல் :** அந்த திக்ருகள் காலை, மாலையில் ஓதக்கூடிய திக்ருகளாகவும் இருக்கலாம் அல்லது ஐவேளைத் தொழுகைகளுக்கு பின் ஓதக்கூடிய ஓதல்களாகவும் இருக்கலாம் அல்லது தூங்கும் போது மற்றும்

---

[56] ) ஆதாரம் : முஸ்லிம் (728).

தூக்கத்திலிருந்து விழித்தவுடனும் இருக்கலாம். ஒவ்வொரு நாளும் காலை – மாலை என்று முஸ்லிமுக்கு தேவையான இவைபோன்ற இன்னும் எத்தனையோ திக்ருகள் இருக்கின்றன.

கண்ணியமிக்க நேரத்தையும் காலத்தையும் வீணடித்து பாராமுகமாக இருந்தவனே, தீயவிடயங்களை விட்டுவிடு. மேலும் சேமித்தவைகளில் மிகவும் மோசமானதாக இருந்துவிடும் எனும் கீழ்வரும் கவிதை வரிகள் சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கின்றன:

.

**ரஜப் கடந்துவிட்டது அவைளில் சிறந்ததை செய்யவில்லையே**

**இதுதான் அருள்பொருந்திய ஷ ஃபான் மாதமாக இருக்கின்றது**

**அறியாமல் நேரத்தை வீணடித்தவனே**

**அதனை கண்ணியப்படுத்துவதால் உயர்வாய் இன்னும் உன்னுடைய எஞ்சிய நாட்களை எச்சரிக்கையாக இரு**

**கட்டாயமாக இன்பங்கள் உன்னை விட்டும் நீங்கிவிடும்**

**நீ வெறுக்கும் வேலையில் உன்னுடைய மரணமும் வந்துவிடும்**

**முடியுமான அளவு உன்னுடைய பாவங்களை விட்டும் தூய்மையான தௌபாவை செய்து கொள்**

**இன்னும் உன்னுடைய தங்குமிடத்தை சாந்தியானதாக ஆக்க வேண்டுவாயாக!**

***

## இறுதியாக : நாங்கள் அல்லாஹ்விடம் நலவை வேண்டுவோம்

மார்க்கத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களை அதிகமாகவோ, விதவிதமாகவோ செய்வதில் கிடையாது. மாறாக அதனை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதைக்கொண்டே இருக்கின்றது. இந்த சிறிய தொகுப்பில் கூறப்பட்ட விடயங்கள் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் பால் நாங்கள் கவனம் செலுத்தவேண்டும் என்பதற்காகவும், அவைகள் இரண்டுமே வணக்கங்களாக ஆக்கிய விடயங்களிலே கரிசனை செலுத்தவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டக்கூடியதாக அமைந்துள்ளது.

நபியவர்களின் வழிமுறைகளை பின்பற்றுமாறு அல்லாஹுத்தஆலா வழியுறுத்துகின்றான் : ''அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது.'' (அத்தியாயம் : அல்அஹ்ஸாப், வசனம் : 21)

இன்னும் நபியவர்களின் வழிகாட்டுதல்களால் நேர்வழிபெறுவதே பின்பற்றுதல் என்ற செயற்பாட்டிற்கான பயனாக இருக்கும். ''எனவே, நீங்கள் அவருக்குக் கீழ்படிந்து நடந்தால் நீங்கள் நேர்வழி பெருவீர்கள்.'' (அத்தியாயம் : அந்நூர், வசனம் : 54)

இந்த நுலிலே ''ஷ.்.பான் மாதம்'' பற்றிய அறிமுகத்தையும், அதில் கூறப்பட்டவைகளையும், இதிலே பரவிக்கிடக்கும் சில பித்அத்தான செயற்பாடுகள் பற்றிய தெளிவையும், இது தொடர்பான பத்வாக்களையும், மற்றும் இந்த மாதம் தொடர்பான பலவீனமான - இட்டுக்கட்டப்பட்ட சில ஹதீஸ்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

முன்னர் கூறப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் மற்றும் அறிஞர்களின் கூற்றுக்களின் மூலம் ; ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை விழாக்கொண்டாடுவதும், அந்த இரவை தொழுகையாலும் - பகல் பொழுதுகளை நோன்பால் மற்றும் இன்னோரன்ன விடயங்கள் மூலம் சிறப்பிப்பது வெறுக்கத்தக்க பித்அத்தாகும் என்பதை அதிகமான அறிஞர்களின் கருத்துக்கள் என்பதை சத்தியத்தை தேடக்கூடிய ஒருவன் கண்டுகொள்வான். மேலும், அதற்கு எந்தவித அடிப்படையும் தூய மார்க்கத்தில் கிடையாது. மாறாக அது ஸஹாபாக்களின் காலத்திற்குப் பிறகு இஸ்லாத்தில் நுழைவிக்கப்பட்ட ஒரு நூதணசெயற்பாடாகும். மேலும், அல்லாஹ்வின் வார்த்தையான ''இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கிவைத்து விட்டேன். என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது முழுமையாக்கிவிட்டேன். இன்னும், உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக்கொண்டேன்.'' (அத்தியாயம் : அல்மாயிதா, வசனம் : 03) என்ற சொல்லுடன் இதே கருத்துப்பட வந்த வசனங்களும், நபியவர்களின் வார்த்தையான ''யார் மார்க்கத்தில் ஒரு

விடயத்தை புதிதாக உண்டாக்குகின்றானோ அது நிராகரிக்கப்படும்.''([57]) என்ற வார்த்தையும்; சத்தியத்தை தேடக்கூடியவனுக்கு போதுமானதாகும்.

அல்லாஹுத்தஆலா எங்களின் நல்லமல்களை ஏற்றுக்கொள்வானாக! மேலும் அந்த நல்லமல்களை நபியவர்களின் வழிமுறையைப் பின்பற்றி அல்லாஹ்விடமிருந்து ஒப்புதல்களையும், தெளிவையும், நேர்வழிகாட்டுதலையும் எதிர்பார்த்து செய்த இஹ்லாஸ் (தூய்மை) ஆன விடமாக ஆக்கிவைப்பானாக! ''மேலும், எந்த நி:மத் (பாக்கியம்) உங்களிடம் இருந்தாலும் இது அல்லாஹ்விடமிருந்து உள்ளதாகும்.'' (அத்தியாயம் : அந்நஹ்ல், வசனம் : 53) மேற்கூறப்பட்ட இறைவசனத்திற்கு ஏற்ப எந்த நல்லவிடயமாக இருந்தாலும் அது அல்லாஹ்வின் புறத்திலிருந்து மாத்திரமே என்றும், ஏற்பட்ட தவறுகள் என்புறத்திலிருந்தும் , ஷைத்தானிடமிருந்துமாகும். அனைத்துப் புகழும் வல்லவன் அல்லாஹ் ஒருவனுக்கே.

மேலும், எங்கள் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தார், அவரின் தோழர்கள் அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!

**இதனை எழுதியவன் :**

**அபூ அப்திர் ரஹ்மான் சுலைமான பின் ஜாஸிர் பின் அப்துல் கரீம் அல்-ஜாஸிர்**

**والحمد لله ربّ العالمين**

---

[57] ) ஆதாரம் : புஹாரி (2697), முஸ்லிம் (1718).

# உசாத்துணைகள்


1- அல்குர்ஆன்

2- அல்அஹ்யாத் அல்முஹ்தஸா வ மௌகிஉல் இஸ்லாம் மின்ஹா, கலாநிதி அப்துல்லாஹ் ஆல மஹ்னா

3- அல்பிதஉ அல்ஹவ்லிய்யா, கலாநிதி அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் அத்துவைஜிரீ

4- தப்ஈனுல் உஜுப் பிமா வரத பீ ரஜப் , இப்னு ஹஜ்ர் அல்அஸ்கலானீ

5- அஸ்ஸுனன் வல் முப்ததஆத் அல்-முதஅல்லிகா பில் அத்காரி வஸ்ஸலவாதி, அஷ்ஷெய்க் முஹம்மத் பின் அப்துஸ் ஸலாம் அஷ்ஷுகைரீ

6- ஸஹீஹுல் புஹாரி , அல்இமாம் முஹம்மத பின் இஸ்மாஈல் அல்புஹாரி

7- ஸஹீஹ் முஸ்லிம் , அல்இமாம் முஸ்லிம் பின் அல்ஹஜ்ஜாஜ் அந்நைஸாபூரி

8- பதாவா அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் பாஸ்

9- பதாவா அல்-லஜ்னா அத்-தாயிமா லில்புஹூஸில் அமலிய்யா வல்இப்தா

10-அல்பதாவா, அஷ்ஷெய்க் மஹ்மூத் ஷல்தூதத் , தாருஸ் ஷுரூக்

11-லதாஇபுல் மஆரிப் பீமா லிமாசிமில் ஆமி மினல் வழாயிபி, இப்னு ரஜப் அல்ஹன்பலீ

12-மா ஸஹ்ஹ வமா லம் யஸிஹ்ஹு பீ ஷ.்.பான, அபூ அனஸ் அல்இராகீ

13-அல்முனாஸபாத் அல்மௌசுமிய்யா பைனல் பழாயிலீ வல்பிதஇ வல்அஹ்காமீ, ஹனான் பின்த் முஹம்மத் அல்யமானீ

# உள்ளடக்கங்கள்


முன்னுரை .................................................................. 02

ஷ:பான் மாதம் பற்றிய அறிமுகம் ........................................ 04

ஷ:பான் மாதத்தின் சிறப்புக்கள் .......................................... 04

ஷ:பான் கடைசிப்பகுதியில் நோன்பு நோற்பது சம்பந்தமான சட்டம் ............ 05

ஷ:பானின் நடுப்பகுதி இரவு ................................................ 09

ஷ:பானின் நடுப்பகுதி இரவை கொண்டாடுதல் ............................ 10

ஷ:பானின் நடுப்பகுதி இரவை கொண்டாட்டமாக எடுத்துக்கொள்வதின் சட்டம் ............ 14

ஷ:பானின் நடுப்பகுதி இரவை விலாக்கொண்டாட்டமாக்குவது பித்அத்தான செயற்பாடு என்பதை தெளிவுபடுத்தக்கூடிய அறிஞர்களின் பத்வாக்கள் ........ 16

ஷ:பானின் நடுப்பகுதி இரவை கொண்டாட்டமாக்கிக் கொள்வதின் சட்டம், மதிப்பிற்குரிய அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ் றஹிமஹுல்லாஹ் அவர்களிடமிருந்து ........ 17

அஷ்ஷெய்க் மஹ்மூத் ஷல்துத் (முன்னால் எகிப்து அறிஞர்) அவர்களின் பத்வா ........ 25

ஷ:பான் மாதத்தில் ஆதாரமற்ற ஹதீஸ்கள் ................................ 26

ஷ:பான் மாதத்திற்கு தயாராகும் முகமாக இம்மாதத்தை அழகான முறையில் பயன்படுத்துவதற்கான சில உபதேகங்கள் ........ 27

இறுதியாக .................................................................. 30

உசாத்துணைகள் ............................................................ 32

உள்ளடக்கங்கள் ............................................................ 33

இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com
ONLINE ISLAMIC TAMIL LIBRARY

follow us on social media

/islamkalvi

ஆயிரத்துக்கு மேற்பட்ட தலைப்புகளில் வீடியோக்கள், கட்டுரைகள் மற்றும் மின் புத்தகங்கள்
குர்ஆன் ஓதவதற்கான எளிமையான தஜ்வீத் சட்டங்கள் • தொழுகை சட்டங்கள் மற்றும் துஆக்கள்
ஹஜ், உம்ரா செய்முறை விளக்கம் • ரமளான் சிறப்புகள் மற்றும் சட்டங்கள்
இதர மார்க்க விளக்கங்கள் மற்றும் சட்டங்கள் • வாரிசுரிமைச் சட்டங்கள் (பாகப்பிரிவினை)
அரபு மொழி மற்றும் இலக்கணப்பாடம் தமிழில் • சிறுவர்களுக்காக திருக்குர்ஆன் கூறும் கதைகள்
வரலாறு, கேள்வி பதில்கள், அகீதா தொடர்கள், மதங்கள் ஆய்வு
இஸ்லாம் அறிமுகம் மற்றும் புதிய முஸ்லிம்களுக்கான வழிகாட்டுதல்கள்